விலை ரூபா 5.00 பக்கங்கள் 10

Registered as a News paper in Srilanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 13 வெள்ளிக்கிழமை (28.12.2001) தொலைபேசி 3378 ஒலி 09

மல்லிகா மிக்சர் மாளிகை



நறு நறு மொறு மொறு

காரமான சுவையுடன்
ரேஸ்ற்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்ற்றி ரைற்றானிக் காரவடை
ரேஸ்ற்றி மரவள்ளி பீஸ்

இல 149, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

## அரசு – புலிகள் பேச்சை முன்னெடுக்க நோர்வே அரசு முன்வரவேண்டும்

### நோர்வே பிரதமருக்கு ரணில் தொலைபேசி அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சிகள் தொடர அனுசரனையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசு அதனை மீண்டும் தொடர முன்வரவேண்டும் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். நோர்வேப் பிரதமர் கொன்ஸ் ரைல்லிக்கும் பிரதமர் ரணில்விக்கிரசிங்கவும் நேற்றுக்காலை தொலைபேசியில் உரையாடியுள்ளனர். இதன்போதே ரணில் நோர்வே பிரதமரிடம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தொலைபேசி உரையாடலின் போது இரு தலைவர்களும் பரஸ்பரம் பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேசியுள்ளனர். இதன் போது ரணில்விக்கிரசிங்க:- வடக்கு கிழக்கில் தொடரும் போரை முடிவுக்கு கொண்டு வந்து விடுதலை (10ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியை தொடர நோர்வே தூதுக்குழு ஜனவரியில் கொழும்பு வரும்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சமா தான முயற்சியில் ஈடுபட்டு வந்த நோர்வே அரசு தனது சமாதானப் பணியை விட்ட இடத்தில் இருந்து தொட ரவுள்ளதாக நோர்வே தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக அடுத்த மாத நடுப்பகுதிகளில் தைப் பொங்கல் தினத்தோடு, நோர்வேயில் இருந்து தூதுக்குழுவொன்று கொழும்பு வரவுள்ளதாகவும், கொழும்பு வரவுள்ள இத் தூதுக்குழு வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் நோர்வே தூதரக அதிகாரிகள் எமது கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (வ)

### இனப்பிரச்சினையை ஆராய செயலணிக்குழு

# திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வுத்திட்டம் முன்னெடுக்க முயற்சி

## பெர்னாட் திலகரட்னாவிற்கு அவசர அழைப்பு

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு அரசியற்தீர்வு ஒன்றைக் காண்பதற்கு செயலணிக்குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்னாள் இராஜதந்திரி பெர்னாட் திலகரத்தனா தலைமை யில் நியமிக்கவுள்ளார்.

இந்த செயலணிக்குழு "திம்புக்கோட்பாட்டின்" அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு குழுவொன்றை அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் செயலணிக்குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

முன்னாள் இராஜதந்திரியும் தற்போது வெளிநாடொன்றில் தங்கியுள்ளவருமான பெர்னாட் திலகரத்னா தலைமையில் அமைச்சர்கள் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மலிந்த மொரகொட ஆகியோரை இணைப்பாளராகவும் கொண்டு இக்குழு அமைக்கப்பட உள்ளது.

முன்னாள் இராஜதந்திரி பெர்னாட் திலகரத்ன ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் (10ம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவால் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோதுமைமாவின் விலை இன்றிலிருந்து கிலோ ஒன்றிற்கு மொத்த, சில்லறை விலைகளில் மூன்று ரூபாவினால் அதிகரிக்கப் பட்டுள்ளது. யாழ்மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இன்று முதல் ஒரு கிலோ பிறிமா மா சில்லறைக்கு 22 ரூபா 75 சதத்திற்கு விற்பனை செய்யப்படவிருப்பதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு கிலோ பிறிமா மாவின் மொத்தவிலை 22 ரூபா 15 சதமாகவும், சில்லறை விலை 22 ரூபா 75 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதேவேளை பேக்கரிகளுக்கு வழங்கப்படுகின்ற மாவின் விலையும் கிலோ ஒன்றிற்கு 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாணின் விலை 1 ரூபாவினால் அதிகரிக்கப் படலாம் என்று பேக்கரிச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

## இத்தாலி செல்ல முயன்ற

## மோட்டார் சைக்கிளில் புலிகள்

ஏற்பட்டு அரசியற்தீர்வு ஒன்றைக் காண்பதற்கு செயலணிக்குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்னாள் இராஜதந்திரி பெர்னாட் திலகரத்தனா தலைமை யில் நியமிக்கவுள்ளார்.

இந்த செயலணிக்குழு "திம்புக்கோட்பாட்டின்" அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுட னான பேச்சு வார்த்தையில் ஈடுபடு வதற்கு குழுவொன்றை அமைக் கும் திட்டத்தின் அடிப்படையில் செயலணிக்குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

முன்னாள் இராஜதந்திரியும் தற் போது வெளிநாடொன்றில் தங்கி யுள்ளவருமான பெர்னாட் திலக ரத்னா தலைமையில் அமைச்சர் கள் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மலிந்த மொரகொட ஆகியோரை இணைப்பாளராகவும் கொண்டு இக்குழு அமைக்கப்பட உள்ளது.

முன்னாள் இராஜதந்திரி பெர்னாட் திலகரத்ன ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின்
(10ம் பக்கம் பார்க்க)

றிலிருந்து கிலோ ஒன்றிற்கு மொத்த, சில்லறை விலைகளில் மூன்று ரூபாவினால் அதிகரிக்கப் பட்டுள்ளது. யாழ்மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இன்று முதல் ஒரு கிலோ பிறிமா மா சில்லறைக்கு 22 ரூபா 75 சதத்திற்கு விற்பனை செய்யப்படவிருப்பதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

மொத்தவிலை 22 ரூபா 15 சதமா கவும், சில்லறை விலை 22 ரூபா 75 சதமாகவும் விற்பனை செய்யப் படவுள்ளன.

இதேவேளை பேக்கரிகளுக்கு வழங்கப்படுகின்ற மாவின் விலை யும் கிலோ ஒன்றிற்கு 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாணின் விலை 1 ரூபாவினால் அதிகரிக்கப் படலாம் என்று பேக்கரிச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

# இத்தாலி செல்ல முயன்ற 25 பேர் அகப்பட்டனர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்லமுயன்ற இருபத்தைந்து பேரை நீர்கொழும்புப் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ள னர்.

மேற்படி இருபத்தைந்து பேரை யும் சட்ட விரோதமாக ஏற்றுக் கொண்டு புறப்பட்ட படகு இயந்தி ரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் அங்கு சென்ற பொலி ஸார் இவர்களை கைது செய்த தாக தெரிவிக்கப்படுகின்றது.
(10ம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிளில் புலிகள் நேற்று மட்டக்களப்பிற்கு சென்றனர்

## மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மோட்டார் சைக்கிள் பிரிவு அணி யொன்று நேற்று முற்பகல் மட் டக்களப்பு அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்கு சென்றுள் ளது.

விடுதலைப்புலிகளின் 19பேர் கொண்ட இம்மோட்டார் சைக்கிள் அணியினர் மட்டக்களப்பில் இரா ணுவக் கட்டுப்பாடற்ற தமது பகு தியில் இருந்து பட்டிருப்புப் பாலம் வழியாக மட்டக்களப்பு நகருக்கு வந்து அங்குள்ள மக்களுடன் பல தரப்பு விடயங்கள் குறித்து பேசி னர்.இதன்போது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரமும் செய்தனர்.

புலிகளின் வருகையால்
(10ம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தலைமைப் பீடத்தில் மிகவிரைவில் முக்கிய மாற்றம்!

## இராணுவத்தளபதி – பொலிஸ் மாஅதிபர் பதவியிழப்பர்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் இரா ணுவப் பொலிஸ் தலைமைப் பீடங் களில் பதவி மாற்றங்கள் ஏற்படுத் தப்படவிருப்பதாக தெரிவிக்கபபடு கின்றது.

இந்த மாற்றத்திற்கு முன்னோடி யாக தற்போதைய இராணுவத் தளபதி லெப்ரினனட் ஜெனரல் பல்லேகலவும் பொலிஸ் லக்கிகொ டித்துவக்கும் எந்நேரமும் பதவிக ளில் இருந்து நீக்கப்படலாம் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தளபதி லெப்ரினனட் ஜெனரல் லயனல் பல்லேகல பொது ஜனஐக்கிய முன்னணியின் தீவிர ஆதரவாளர் என்றும், கடந்த தேர்தலின்போது தபால் மூலமான வாக்களிப்பின்போது யாழ்குடாவில் நிலைகொண்டுள்ள படையின ருக்கு பொதுஜனஐக்கிய முன் னணியின் தேர்தல் துண்டுப்பிரசுரங் க்ளை விநியோகிக்க ஏற்பாடுக்ளை செய்திருந்தார் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி அப்போது குற்றம் சாட்டியிருந்தது.

இது இவ்வாறிருக்க இராணுவத் தளபதியும், பொலிஸ்மா அதிபரும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை சேவை நீடிப்புப் பெற்றிருந்த போதிலும் அவர்களின் சேவை நீடிப்பை அரசு உடன் இரத்துச் செய்யவிரும்புவதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (வ)

# சிவில் காரியாலயத்தில் றான் அலுவலகம் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

ரான் அலுவலகம் இடமாற்றப் பட்டு யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிவில் காரியாலயத்தில் இயங்குமென யாழ் அரச அதிபர் கே.சண்முக நாதன் அறிவித்துள்ளார்.

முன்னர் யாழ் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மணியம் கட்டடத்தில் இயங்கிய இவ்வலுவ லகம் கடந்த 19ம் திகதி முதல் சுண்டுக்குளி கண்டி வீதியிலுள்ள ரான் பங்களாவுக்கு முன்னாலுள்ள கட்டடத்தில் இயங்கியது. தற் பொழுது இவ்வலுவலகமே மீண் டும் சிவில் காரியாலயத்திற்கு மாற் றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இனிமேல் இவ்வலுவலகத்தி லேயே விமானம் மற்றும் கப்பல் பயணிகளுக்கு பயண அநுமதிப் பத்திரம் வழங்கல், பயண அநுமதி பார்வையிடல் போன்ற செயற்பாடு கள் இடம் பெறும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ10)

# வடமராட்சியிலும் விமானப் பயணச் சீட்டு

கொழும்பு பயணசேவையை மேற்கொள்ளும் வடமாரட்சி மக்க ளுக்கு பயணஅனுமதி, ரிக்கெட் வழங்குவதற்கான அலுவலகம் விரைவில் வடமராச்சியில் இயங்க உள்ளது.

அதற்கான ஏற்பாட்டை
(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்

## கடற்றொழிலாளர் சமாசம் கோரிக்கை

(மந்திகை)
வடமராட்சிப் பகுதியில் தொண்டமானாறு முதல் சக்கோட்டை வரையான கடற் பகுதியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி சுதந்திரமாக தொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறு வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் பலாலி படைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
சக்கோட்டை, திக்கம், பொலிகண்டிகிழக்கு. பொலிகண்டி மேற்கு. வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிமற்றும்தொண்டைமானாறு ஆகியபகுதிகளில் மீன் பிடிக்கவிதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி கடற்றொலில் சுதந்திரமாக ஈடுபட அனுமதிக்குமாறு வடக்குஅபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்
அதற்குஅமைச்சர்அப்போது கால அவகாசம்கோரியதுடன் அதனை செய்து தருவதாகவும் உறுதியளித்திருந்தார் அத்துடன் தடையால் கடற்றொழிலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுதொகை வழங்கவும் சம்மதித்திருந்தார்.
இந் நிலையில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் அரசியல் மாற்றத்தால் இந் நிலைமை தடைப்பட்டு விட்டதாக தெரிவித்த சமாசத் தலைவர் தொடரும் மீன்பிடித் தடையை நீக்க இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு கடிதமொன்று அனுப்பியுள்ளதாகவும்கூறினார். (இ-23-43

### வடமராட்சியில் ஒளி விழா

(மந்திகை)
வடமராட்சிதெற்கு, மேற்கு பிரதேச செயலக உத்தியோகஸ்தர் நலன்புர்ச்சங்கம் நடாத்தும் ஒளிவிழாவும் சமாதானப் பிரார்த்தனையும் இன்று காலை10மணிக்கு பிரதேசசெயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நெல்லியடி தனங்கன்புளியடி முருகமூர்த்திஆலய கல்யாணமண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் அருட்தந்தை அன்ரனிதாஸ் அருட்திரு சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுபிரார்த்தனை நடத்தவுள்ளனர். [இ-23]

# வவுனியாவில் சுகாதார சீர்கேடு 17 விற்பனை நிலையங்களை மூடிவிடுமாறு உத்தரவு

(வவுனியா)
வவுனியாவில் சுகாதார சீர்கேடான முறையில் இயங்கி வந்த 17விற்பனை நிலையங்களை உடனடியாக மூடி விடுமாறு மாவட்ட சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் ஆறுமுகம்கேதீஸ்வரன்உத்தரவிட்டுள்ளார்.
வவுனியா நகரசபை எல்லைக்குள்ளும் பிரதேசஎல்லைக்குள்ளும் உள்ள விற்பனை நிலையங்களை பரிசோதனை செய்த போது இச் சுகாதார சீர்கேடுகள் கண்டு பிடிக்கப்பட்டன, (வ)

# தேர்தல் வன்முறைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## கொழும்பில் ஜே. வி. பி. நடத்தியது

(கொழும்பு)
தேர்தல் நடந்து முடிந்த பின்பும் தொடர்ந்தும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நாட்டில் இடம் பெற்று வருவதைக் கண்டித்து ஜே.வி. பி நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது.
இந்த ஆர்ப்பாட்டத்தோடு கொழும்புநகர் எங்கும் தேர்தலுக்குப்பின் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன
நேற்று பிற்பகல் 4.30மணிக்கு இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது [வ]

# கொருப்பனவை அதிகரிக்குக பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் கோரிக்கை

(கோப்பாய்)
பகுதிநேர ஆங்கிலஆசிரியர்களின் கொடுப்பனவுகளைஅதிகரிப்பதற்கான நடவடிக்கையினை ஆசிரியர் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டுமென இவ்வாசிரியர்கள் சார்பில் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.
நீண்டநாட்களாக நாளொன்றுக்கு இரண்டுமணி நேரம் கடமைபுரிவதற்கு 80 ரூபா வழங்கப்பட்ட போதும் நாம் முழுநேரமும் ஏனையஆசிரியர்களுக்குரிய சட்டதிட்டங்களுக்கமைவாக கடமை புரிவதாகவும், இதுவரை தமதுகொடுப்பனவுகளை அதிகரிக்க எவ்வித நடவடிக்கைகளையும் உருப்படியாகமேற்கொள்ளப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-79)

# தட்டெழுத்தில் சித்தியடைந்த 42பேருக்குநியமனம் வழங்கவில்லை

## அமைச்சரிடம் முறையீடு

(கொழும்பு)
1999ம்ஆண்டுநடத்தப்பட்ட தமிழ், சிங்கள ஆங்கில தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 42பேருக்கு இது வரை நியமனம் வழங்கப்படவில்லையென அகில இலங்கை பொது ஊழியர் சங்கம், பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் ஜிர அபய வர்த்தனாவிடம் தெரிவித்துள்ளது.
இது தவிர வடக்கு கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 118பேருக்கு இந் நியமனம் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் அச்சங்கம் அமைச்சரிடம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-4)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்குக

## மகேஸ்வரனிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது முழுப்பலத்தையும் பிரயோகிக்க வேண்டுமெனயாழ் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
அமைச்சர் மகேஸ்வரனை நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் நேற்றுசந்தித்து கலந்துரையாடியது இக்கலந்துரையாடலின் போதேமேற்கண்டவாறு கோரிக்கைவிடுக்கப்பட்டது.
அக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகள் வருமாறு.
★ என்றுமில்லாதவாறு தற்போது குடாநாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடன்நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
★ குடா நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்தி இப்பொருட்களை நியாயவிலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.
★ கொழும்பு செல்லும் பயணிகள் எதிர்நோக்கும் தேவையற்ற தொல்லைகளையும் காலதாமதத்தையும் நீக்க உடனடி கவனம்எடுக்கப்பட வேண்டும்
● வீதிகளில் தொடரும் தேவையற்ற இராணுவசோதனைகள் நிறுத்தப்படல் வேண்டும். [இ]

# அமரத்துவ அதிபர்தின விழா

(கோப்பாய்)
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் அமரத்துவ அதிபர்தினவிழாநேற்றுகல்லூரிஅதிபர் என்.சிவகடாட்சய தலைமையில் நடைபெற்றது
இவ் விழாவில் அமரத்துவமடைந்த கல்லூரியின் முன்னைநாள் அதிபர்களின் திருவுருவப்படங்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது(இ

# கிறிஸ்மஸ் ஆராதனை

[மந்திகை]
சாவகச்சேரி புனிதலிகோரியார் தேவாலயத்தில் இடப்பெயர்வின் பின்நத்தார் தினத்தன்று விசேடபூசையும் கிறிஸ்மஸ் ஆராதனையும் நடைபெற்றது. (உ-23)

# குமாரின்2வது சிரார்த்த தினம

(யாழ்ப்பாணம்)
அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலரும் சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின்இரண்டாவது சிரார்த்ததினம் ஜனவரிமாதம் 5ஆம்திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.
இதனையொட்டி யாழ்ப்பாணத்திலும் நாட்டின்ஏனைய பாகங்களிலும் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன
அன்றைய தினம் நல்லூரில் அஞ்சலிக்கூட்டமும் மறுநாள் வடமராட்சியில் பொதுக்கூட்டமும் விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன (உ-106)


## அரசாங்க அறிவித்தல்

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

2002 ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்யும் திகதி 31-12-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை 29-11-2001 நாளிதழில் வெளி வந்த எமது விளம்பரத்தைப் பார்வையிடவும்.

வைத்திய கலாநிதி
(செல்வி) என். கனகரத்தினம்
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C-3078)



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம் இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு.

## வெளிவாரிப் பரீட்சைகள்

வர்த்தகமாணி பகுதி III - 2000
வர்த்தகமாணி பகுதி II - 2000

மேற்படி பரீட்சைகள் 07-01-2002 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் ஆரம்பமாகவுள்ளன. நேர அட்டவணையையும், அனுமதி அட்டையையும் அலுவலக நேரத்தில் வெளிவாரிப் பிரிவிலும், வவுனியா வளாகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021 - 3612 (யாழ்ப்பாணம்) 024 - 20269 (வவுனியா) என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
27-12-2001

(இ-3080)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட பேக்கரி
ஊழியர்
திரு. சி. தயாளன்
அவர்களின் பாசமிகு தந்தையார்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு துயர் அடைகின்றோஅம். வரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்
யா. மா. பே. உ. சங்கம்.
317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-3079)

[ அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு ]

# அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்து

# ஜனவரி 8ஆம் திகதி கவன ஈர்ப்புப் போராட்டம்

## நாடாளுமன்றில் நடத்த சிவாஜிலிங்கம் எம். பி. முடிவு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மக்கள் தொடர்ந்தும் அனுபவித்து வரும் அவலங்களை தீர்த்து வைப்பதில் அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து, எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது, கவன ஈர்ப்புப் போராட்டமொன்றை நடத்துவதென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். கே. சிவாஜிலிங்கம் முடிவு செய்துள்ளார்.

நாரந்தனையில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவத்தில் பலத்த காயமடைந்து, நடக்க முடியாத நிலையில் கொழும்பு நவலோக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் சிவாஜிலிங்கம் எம்.பி இது தொடர்பாக வலம்புரிக்குத் தகவல் தருகையில்,

யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்கள், மற்றும் எரிபொருட்களின் விலைகள் என்றுமில்லாதளவு உயர்ந்து காணப்படுவதுடன், இவற்றுக்குப் பலத்த தட்டுப்பாடும் நிலவுகின்றது.

இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புற்றுவருகின்றனர்.


தவிரவும், முன்னைய அரசாட்சியில் வடமராட்சி மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மீன்பிடித்தடைச் சட்டத்தை ஆட்சி பீடம் ஏறியதும் அகற்றுவேன் என உறுதிமொழியளித்து ஆட்சியைக் கைப்பற்றிய ரணில் தலைமையிலான அரசு, இந்தப் பிரச்சினைக்கு இதுவரை உருப்படியான தீர்வெதனையும் முன்வைக்கவில்லை.

மேற்படி பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு கண்டு மக்களை துன்பங்களில் இருந்து மீட்கும் வகையில் அரசிற்கு 10 நாள் அவகாசம் வழங்கியுள்ளேன்.

அரசு தொடர்ந்தும் தனது வழமையான போக்கையே கடைப்பிடிக்குமானால், கவன ஈர்ப்புப் போராட்டம் நடத்துவது தவிர்க்க முடியாதது என்றார்.

இதேவேளை, இது விடயம் தொடர்பாக, மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மற்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரின் கவனத்தின்கீழ் கொண்டுவர விருப்பதுடன்,

எதிர்வரும் 7ஆம் திகதி 4 தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழு கூடும் போது இவ் விடயம் பற்றி பிரஸ்தாபித்து, தனது



முயற்சிக்கு வலுச் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (உ)

## தையல் மனையியல்

# டிப்ளோமா பரீட்சை பிற்போடப்பட்டது

(யாணிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாவட்டத்தில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த மாதர் அபிவிருத்தி நிலைய தையல் மனையியல் பயிற்சி மாணவர்களுக்கான டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வினாத்தாள்கள் வந்து சேர்ந்த போதிலும் க. பொ. த சாதாரணதரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதாலேயே வேறோர் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இரவீந்திரன் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார். [உ-120]

## தேசிய இளைஞர்

# சேவைகள் மன்றத்தினால் 3 திட்டங்கள் அமுல்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றம் வடக்கு-கிழக்கு இளைஞர் சிரம அணித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் மூன்று வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

அத்திட்டத்தின்கீழ் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டுமைதானம் புனரமைப்பு, மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கு புனரமைப்பு, மற்றும் கரப்பந்தாட்ட, வலைப் பந்தாட்ட ஆடுகளம் அமைப்பு, சங்கானை சுப்பபிரகாசம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் புனரமைப்பு போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ரூபா இரண்டு லட்சம் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதாக யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார். (உ-10,106)

## நீர்வழிந்தோடவசதியில்லை

# மழை வெள்ளம் தேக்கம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சாவல்கட்டு சந்தி ஞானவைரவர் ஆலயப்பிரதேசத்தில் உள்ள பகுதியில் பெருமளவு மழை நீர் தேங்கி நிற்கின்றது.

இதனால் இப்பகுதியில் ஈ, நுளம்பு பெருக்கம் அதிகரித்திருப்பதுடன, தொற்றுநோய் அபாயம் குறித்தும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி தேங்கும் வெள்ளம் வழிந்தோடத்தக்க வகையில் வெள்ள வாய்க்கால் திருத்துவதற்கு பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட போதும், அதற்கான நடவடிக்கை இன்னமும் எடுக்கப்படவில்லை எனவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-201)

## மக்கள் வங்கி திங்கட்கிழமை 1 மணிநேரசேவை

(யாழ்ப்பாணம்)

வருட இறுதிக் கணக்குகளை முடிப்பதற்கு ஏதுவாக எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை, யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் யாவும் காலை 9 மணி முதல் 10 மணிவரையுமே திறந்திருக்கும் எனபிரதேச முகாமையாளர், சகல வாடிக்கையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (உ)

## மாணிக்கவாசகர் மடாலய

# அன்னதான சபையின் 75 வது ஆண்டுநிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் 75 வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தலைமையுரைகளை ஆலய ஆதீன கர்த்தாக்களும் மடாலய சபைஇணைத் தலைவர்களுமான ஆ. அம்பலவி, மு. சுந்தரலிங்கம் ஆகியோரும் அருளுரையைநல்லை ஆதீன திருஞான சம்பந்தர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளனர்.

ஆசியுரைகளை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன், அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், செ. ஆறுமுகம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

சிறப்புரையை ஆசிரியர் ஆறுதிருமுருகன் நிகழ்த்தவுள்ளார்.

சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய பெருந்தொண்டைப் பாராட்டி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வர குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதுடன்,

காரைநகர்ப் பாடசாலைகளில் க. பொ. த. (உ/த) கல்வி கற்று பல்கலைக்கழகம் புகும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அறக்கொடை நிதியம் ஒன்றும் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ)

## சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

கடந்த புதனன்று பகல் வேளை, யாழ்ப்பாணம் நாவலர் வீதி பிறவுண் றோட் அருகாமையிலுள்ள கடை ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருட்டுப் போயுள்ளது [உ]

## யாழ். குடாநாட்டு

# மக்களுக்கு வேண்டிய மா விரைவில் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

மழை, மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக கப்பல் வருவதில் ஏற்பட்ட தாமதத்தினால் யாழ். குடா நாட்டில் நிலவியமாத்தட்டுப்பாட்டை போக்கும் வகையிலான செயற்பாடுகள் விரைந்துமுன்னெடுக்கப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வகையில், பருத்தித்துறை வந்தடைந்த ஹெந்தல கப்பலில் இருந்து மாஇறக்கும் பணி நடைபெறுவதாகவும்,

இன்னுமோர் கப்பலில்யாழ் குடாநாட்டுக்குதேவையான மா ஏற்றப்பட்டு வருவதாகவும், அவ் வட்டாரங்கள் மேலும்தெரிவித்தன. [உ-10]

## காய்ச்சல் நோயாளர் அதிகரிப்பினால்

# பருத்தித்துறை வைத்தியசாலையில் சேலைனுக்குத் தட்டுப்பாடு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் குளுக்கோஸ்சேலைன் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

அண்மைக்காலமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் இவ்வைத்தியசாலையில் பெருமளவில் காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல் நோயாளர்கள் அனுமதிக்கப்படும் நிலையில் மேற்படி பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதனாலேயே இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும்,

இதனால் குளுக்கோஸ், சேலைன் ஆகியவற்றைப் பொதுமக்கள் தனியார் கடைகளில் பெற்றுக்கொள்ளுமாறு பணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள மக்கள் மட்டத்தில் இந்நிலைப்பாடு மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. [உ-23]

## இராசி பலன்

28 12 2001
(மார்கழி 13, வெள்ளி)
திரயோதசி மா: 6 39 வரை
ரோகிணி பி.இ 2.47 வரை
ராகுகாலம் 10.58 - 12.28
சுபநேரம் 6.28-7.58
பிரதோச விரதம்

**மேடம்**
புதிய திருப்பம், மூத்தசகோதரர் உதவி, காரிய தாமதம். தனவிரயம்.

**இடபம்**
வாக்குப்பலிதம், தொழில் கஷ்டம், அபகீர்த்தி, காரிய அனுகூலம்.

**மிதுனம்**
சயனசுகக்குறைவு, உடல் வியாதி, காரியதாமதம், வீண் கோபம்.

**கடகம்**
காரிய நன்மை, பொருள் வரவு, உறவினர் வருகை, கீர்த்தி.

**சிங்கம்**
செய்தொழில் சிறப்பு, பிறர் உதவி, முயற்சி பலிதம் நல்லசெய்தி.

**கன்னி**
பிரயாணம், புதியதிட்டம், காரிய தாமதம், மனச்சஞ்சலம்.

**துலாம்**
துயரம், பிரயாணக்கஷ்டம், முயற்சிதாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
உறவினர்சந்திப்பு சுவாரஸ்யம், காரியம் கைகூடும், பயணம்.

**தனுசு**
உடல்நலம், தனவரவு, முயற்சி கைகூடும், போசன சுகம்.

**மகரம்**
வியாபாரநன்மை, உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம், கலகம்.

**கும்பம்**
தன்னம்பிக்கைக் குறைவு, உடல் சோர்வு, காரியதாமதம், திடீர்நன்மை.

**மீனம்**
காரிய அனுகூலம், தனவரவு, சகோதரர்உதவி, வாக்குப்பலிதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

## உயர்தரமாணவர்களுக்கான

# அறிவியல் வினாக்கள்

### இல. 87. தொகுப்பு : ஸ்ரீ. மயூரன்

### பொது அறிவு

★ **சுருக்கமான விடை தருக.**

1) கிராமிய வங்கிகளின் நிர்வாகம் எந்த வங்கியின் கீழ் உள்ளது?
2) கதிர்ப்பைக் கண்டறிந்தவர் யார்?
3) ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையத்தின் பெயர் என்ன?
4) 100% காபனைக் கொண்ட இரத்தினக்கல் வகை எது?
5) அமெரிக்காவின் கறுப்பின மக்களின் உரிமைக்காக போராடிய தலைவர் யார்?

★ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின பிழை எனவும் அடைப்புள் இடுக.**

6) விரைவாக வளரும் பயனுள்ள மரமாக இப்பில் இப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது ( )
7) அஸ்வான் அணை அமைந்துள்ள நதி நைல் நதி ஆகும் ( )
8) கலை, விஞ்ஞானம் ஆகிய இரு துறைகளிலும் மேதை என புகழ் பெற்றவர் நியூட்டன் ஆவார் ( )
9) சவர்க்கார உற்பத்தியின் ஒரு பக்க விளை பொருளாக கிளிசரின் பெறப்படுகிறது ( )
10) மனித வாழ்க்கையில் மிக நீளமான பௌதிக, உள வளர்ச்சி உள்ள காலகட்டம் இளம்பருவம் ஆகும் ( )

★ **பின்வரும் இலக்கியங்களை இயற்றியோரது பெயர்களை தருக.**

11) சிலப்பதிகாரம் -- — — —
12) மனோன்மணியம் — — — —
13) குறிஞ்சிப்பாட்டு — — — —
14) சீறாப்புராணம் — — —
15) திருக்குற்றாலக்குறவஞ்சி - — —

★ **பின்வரும் இயற்கை வளங்கள் காணப்படும் இடங்களை தருக.**

16) விக்டோரியா ஏரி ——————
17) மார்டோலா நீர்வீழ்ச்சி ——————
18) அமேசன் நதி ——————
19) நம்சாபர்வதா மலைசிகரம் ——————
20) வின்னிபெக் ஏரி ——————

### நுண்ணறிவு

★ **பின்வரும் வினாக்களில் தரப்பட்ட 5 சொற்தொகுதிகளில் ஒன்று வேறுபட்டு காணப்படுகிறது. அதன்கீழ் கோடிடுக.**

21) அடக்கம், படடம், அம்மா, அம்பு, அப்பு
22) வெளிச்சம், அச்சம், பக்கம், மச்சம், மிச்சம்
23) NOP, DEF, MNO, IKL, XYZ
24) 12672, 16784, 126, 16721, 1234
25) அப்பு, மழை, நீர், கடல், வான்

★ **26-35 வரையானவினாக்கள் ஆங்கில நெடுங்கணக்குத் தொடர்பினவை. A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z இதன அடிப்படையாகக் கொணடு பினவரும் வினாக்களில் அடுதது வரும் எழுத்தினைப் புள்ளிக கோட்டில் எழுதுக**

26) A X A Y B X B Y C X C Y (——)
27) A B C X Y Z D E F X Y Z G (——)
28) H Z G H Z F G H Z E F G H Z (——)
29) B D G K P V (——)
30) A Z A A Y A A X A A W A A (——)
31) BbD CCF EE (——)
32) E T J Y O D T I Y (——)
33) Z W T Q (——)
34) A Z B Y C X D (——)
35) A D G J M (——)

★ **கீறிட்ட இடங்களை பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.**

36) ஆடுகளின் கூட்டம்→மந்தை: பசுக்களின் கூட்டம் ——————
37) கத்தரியின் வித்து→விதை: நெல் வித்து ——————
38) தேங்காயின் பிஞ்சு→குரும்பை: மாவின் பிஞ்சு ——————
39) ஆடுமேய்ப்போன்→இடையன்: குதிரை மேய்ப்போன் ——————
40) தென்னை இலை→ஓலை: நெல் இலை ——————

**குறிப்பு:-** விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும், இதற்கான விடைகளை 02 01.2002 இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# பொருட்களை பதுக்கிவைப்பது கொள்ளை இலாபம் ஈட்டும்செயல்

## கண்டிக்கிறது யாழ். வணிகர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வர்த்தகர்கள்பொருட்களைபதுக்கி வைத்து, விலைகளை அதிகரித்து, கொள்ளை இலாபம் பெறுவது கட்டுமீறி விட்டது. இதனைத்தாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், மிகவும் மனவேதனையும் அடைவதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கழகம் நேற்று "பொருட்களைப் பதுக்கி கொள்ளை இலாபம் பெறுவது மகாபாவம்" என்ற தலைப்பில் பத்திரிகைக் குறிப் பொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சென்றகிழமைஎமது கழகம் புதினப்பத்திரிகைகள் மூலம் பொருட்களின் விலையைக் கூட்டி பொதுமக்களுக்கு வாழ்க்கைச் சுமையை ஏற்படுத்த வேண்டாமென பணிவாகக் கேட்டுக்கொண்டபோதும் அன்று இருந்ததைவிட பொருட்களின் விலை நாளுக்குநாள் அதிகரித்து உச்சக் கட்டத்தை தற்போது அடைந்திருப்பதுமிகுந்த வேதனையைத் தருவதுடன் வர்த்தகர்களைச் சமூகத்திலிருந்து ஓர் கீழான நிலைக்கு பொது மக்களால் கணிக்கப்படுவதற்கும் வழிவகுக்கின்றது என்பதை மிகமனவருத்தத் துடன் தெரியப்படுத்துகின்றோம்.

எமதுமண்ணின்முதுகெலும்பாகிய எமது வர்த்தகர்கள் போர்க்கால இச் சூழ்நிலையையும் மக்கள்படும் இன்னல்களையும், கஷ்டங்களையும் மறந்து பணமொன்றே நோக்கமாகக் கொண்டு செயற்படுவது எமதுமண்ணிற்கு நல்லதல்ல என்பதனையும் மிகுந்த வேதனையுடன்தெரியப்படுத்துகின்றோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அறிவியல் வினா இல-86 விடைகள்

1) 1982
2) ஒருபுகத் ஒருசார்
3) அப்பலோ
4) மிஸ்டர் சிமித்
5) நவீன தொடர்பாடல் வகை
6) உலக மனித உரிமைகள் தினம்
7) 1965
8) 1865
9) ஹோமாக
10) 1980
11) காளிதாசன்
12) அனுமார்
13) 83
14) தொல்காப்பியம்
15) சேதுபதி
16) ✓
17) ✗
18) ✗
19) ✓
20) ✓
21) 2865 X
22) 9574 V
23) 2 N 17 V
24) 3L 26X
25) 2OL 2m
26) 5m 36V
27) 3L 16V
28) 5m 75X
29) 3V 34V
30) 9056X
31) மேகம்
32) 579
33) 4
34) குற்றம்
35) ஆசியா
36) U, H, C
37) N
38) சகோதரர்
39) சகோதரர்
40) சகோதரர்

# பாராளுமன்றம்முன்பாக இளமையின் மலர்வு

## புதுவருட வரவேற்புநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் புதுவருடத்தை வரவேற்குமுகமாக இவ்வார இறுதியில் பாராளுமன்றம் முன்பாக 'இளமையின்மலர்வு' என்றதொனிப் பொருளிலான விசேட நிகழ்வொன்றுஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

'சிரச' தொலைக் காட்சி ஊடக வியலாளர்களின் ஆதரவுடன் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜே பெர்னாண்டோவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் மலரும்புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம் நாளையதினத்தை மெருகூட்ட ஒன்றுபடுவோம், புதிய உலகை உருவாக்குவோம் என்ற கோஷங்களை முன்னிறுத்தி பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடகியுள்ளன.

(உ10,106)

# கிறிஸ்து பிறப்பு நாடக பிரதியாக்க போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நத்தார் பெருநாளை முன்னிட்டு நடாத்திய கிறிஸ்து பிறப்பு நாடகப் பிரதியாக்கப் போட்டி முடிவுகள் வருமாறு.

★ முதலாம் இடம்: [உயிர்க் கற்கள்] குணசேகரம் சுதர்சன் புகையிரத வீதி, கோட்டைக்காடு மல்லாகம.

★ இரண்டாம் இடம்: [புதிய பிறப்பு] ஜ இராயப்பு 246, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் இடம்: [விடியலைத் தேடும் பறவை] செல்வி ஜே.டொறின் சுகந்தா 31/3, புதுவீதி, ஜொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம்.

**ஆறுதல் பரிசுகள்**

★ [கடவுள்]
அருள் சகோதரர் விமல் [அ.ம தி] அ.ம.தி குருமடம் கொழும்புத்துறை.

★ [பிறப்பு]
எட்வேட் சாம்ராஜ், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

★ [புதுப் பிறப்பு]
வெ. மிக்கேல், 2ம் குறுக்கு வீதி, பாஷையூர்.

★ [மீண்டும் இந்த மண்ணில் பிறக்க மாட்டாயா?
மரி மாக்குலேற் ராஜ்குமார். அச்சுவேலி.

★ [ஒளி வந்த நேரம்]
செல்வி கிருஷ்ணரங்கா சிவநேசன், தரம் 13, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

★ [விடியலைத் தேடி]
அ. அமல றாஜேஸ்வரி புனித மரியாள் ஆலயம் நெடுந்தீவு கிழக்கு 12.

★ [தேவமகிமை]
மு தணிகாசலம். கற்கோவளம், பருத்தித்துறை.

இவர்களுக்கான பரிசளிப்பு இன்று திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும் ஒளி விழாவின் போது இடம்பெறவுள்ளது. [உ-106]

# அறிவியல் வினா இல-86

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ சி. சயந்தன், யாழ்ப்பாணம்
★ வி. தமிழ்ச்செல்வி, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
★ ப. கவிதா, யாழ்ப்பாணம்
★ அ. தீபன், அளவெட்டி
★ சி. தாரிணி, கோண்டாவில்
★ கி. மலர்விழி, சுன்னாகம்
★ உ. காந்தரூபன், அளவெட்டி
★ சோ. தர்ஷிகா, கொக்குவில்
★ வ. கலைவாணி, புன்னாலைக்கட்டுவன்
★ க பிரதீபா, உரும்பிராய்

# அறிவியல் பகுதி

## வினா இல: 87

"வலம்புரி"
இல: 15 வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ______________

சொந்த முகவரி: ______________

கற்கும் பாடசாலை ______________

மாணவர் கையொப்பம்: ______________

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# தரங்குறைந்த சிற்றுண்டிகள்

(மானிப்பாய்)

குடாநாட்டிலுள்ள தேநீர்க்கடைகளில் வடை உட்பட சிற்றுண்டி வகைகளின் தரம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. (உ-120)

## இன்று ஒரு தகவல்

# சிரிப்பு நல்ல மருந்து

வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்று சொல்வதுண்டு.

அது என்ன வெறும் அலங்காரத்திற்காக சொன்ன வார்த்தை இல்லை. அர்த்தத்துடன் சொன்னவார்த்தையா என்று யோசித்தால்,

அதில் உண்மையாக அர்த்தம் உண்டுஎன்றுதான்தோன்றுகிறது. ஆதார பூர்வமாக அதுக்கு சில நிருபணங்களும் உண்டு.

Normancousins என்று ஒருத்தர். அவர் ஒரு அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர். அவருக்கு ஒருவிதமான நோய் வைத்தியர்கள் எல்லாம அதற்குவைத்தியம் எதுவும் கிடையாது என்று சொல்லி விட்டார்கள்.

உடனே அவர் வைத்திய சாலை அறையை விட்டு ஹோட்டலில் அறை எடுத்து அங்கு தினமும் அவருக்குப் பிடித்த நகைச்சுவைப் படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். சிரிப்பு புத்தகங்களை படித்தார்.

கொஞ்சநாளாகியபின் அவருக்குஇருந்த நோய் குணமாக ஆரம்பித்தது. இதை அறிந்த வைத்தியர்கள் வந்து அவலர சோதித்துப் பார்த்து அவர் நோய் குணமாக காரணமாக இருந்தது சிரிப்பு என்பதை விஞ்ஞான பூர்வமாக ஒத்துக் கொண்டாகள்.

இருந்தும் சிரிப்பு எந்த முறையில், எந்த விதத்தில் உதவுகிறது என்பதை கண்டு பிடிக்க முடியவில்லை;

ஆனாலும் ஒருசில விஷயங்கள மட்டும் புரிகிறது. சிரிப்பு சுவாசத்தைமேம்படுத்துகிறது இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

உடம்பு குணமாகிறதற்கு உரிய சில ஓமோன்கள் உருவாகிவர வழி செய்கிறது. 'ஹா... ஹா' என்றுசிரித்தால் மட்டும் உடம்புக்கு நல்லதில்லை. லேசான புன்னகை பூத்தால் அதுவும் உடம்புக்கு நல்லதாம் இதுவும் விஞ்ஞான ரீதியாக கண்டறிந்த உண்மை.

எப்பவாவது மனது சங்கடப்பட்டால் முயற்சி பண்ணி சிரிக்கவேண்டும. அப்படி சிரித்தால் சங்கடம் ஓடிவிடும். வாழ்க்கையில் நாம உற்சாகமாக இருக்க வேண்டும் என்றால் நம்முன்னால் இருப்பவர்கள் உற்சாகமாக நகைச்சுவை நிறைந்தவராக இருக்க வேண்டும். அவர் மூஞ்சியை தொங்கப் போட்டுக் கொண்டு இருந்தால் கொஞ்சநாளில் நாமும் அப்படியே ஆகிவிடுவோம் எடுத்ததுக்கெல்லாம் கோவிக்கக் கூடாது. நிதானமாக சிந்திக்கவேண்டும்.

தமாஸ் புத்தகங்களை வாங்கி வீட்டில் நூல் நிலையம் உருவாக்கி தினமும் படிக்கவேண்டும்.

சிரிப்பு என்றால் எல்லா விதமான சிரிப்பும் உடம்புக்கு நல்லது என்று நினைக்கக் கூடாதாம் JamesCarroll என்ற அமெரிக்க நிபுணர் என்ன சொல்லுகிறார் தெரியுமா.

அடுத்தவர்களை கேலிபண்ணுவது. கிண்டல் பண்ணுவது, நையாண்டிபண்ணுவது எல்லாம் நல்லதல்ல. அடுத்தவங்களை தொந்தரவு பண்ணாத ஜோக் எல்லாம் எப்பொழுதுமே நல்லது. யாராவது ஜோக் சொன்னால் நல்லா சிரிக்கவேணும்.

என்னிடம் ஒருவர்வந்தார். அவர் ரொம்ப சீரியஷா இருந்தார். அவருடன் கூட வந்தவரைப்பார்த்து என்ன விஷயம எனக்கேட்டேன். இவர் ஒருஜோக்சொன்னால்உடனே சத்தம போட்டு சிரிக்கிறார். என்றார் அவர்;

ஜோக் ஒன்றுக்கு சிரித்தால் அது பிரச்சினை இல்லையே என்றேன்.

சிரித்தால் அது பிரச்சினை இல்லை. சிரிக்க ஆரம்பித்தால் பின்னர் நிறுத்துவதே இல்லை என்று சொன்னார் வந்தவர்

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்;**

# அடுத்தவருடம் அதிகளவு இலங்கையர்களுக்கு வெளிநாட்டுவேலைவாய்ப்பு

(கொழும்பு)

அடுத்தவருடம் இலங்கையர்களுக்கு அதிகளவான வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் வெளிநாட்டு தொழில் முகவர்கள் சங்கம நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்சப்படுகிறது.

இவ்வருடம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம பேருக்கு வெளிநாட்டுதொழில்வாய்ப்பு கிடைக்கப்பெற்றது அடுத்த வருடம் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் சுறாஜ் பெந்தெனிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமன்றி தென்கொரியா சைப்பிரஸ் போன்ற நாடுகளுக்கும் வேலைவாய்ப்பு நிமித்தம் ஆண்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நாடுகளில் மேசன்வேலை, தச்சுவேலை சாரதி, கணனி போன்ற பல்வேறு துறைகளில் கேள்வி நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்' (உ-5)

# வெள்ள நிவாரணமாக சமைத்த உணவு வழங்க அமைச்சர் உத்தரவு

(வவுனியா)

கடந்த ஒருவார காலமாக பெய்த அடைமழை காரணமாக வெள்ளப் பாதிப்புகளுக்குள்ளான மக்களுக்கு மூன்றுநாள் சமைத்தஉணவும் ஒருவார காலத்துக்கான உலர் உணவும் வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத்ஜெயவர்த்தனா வவுனியா அரச அதிபருக்கு அவசர பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த நிவாரணஉதவி சமூக சேவை பணிப்பாளர் நாயகம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இராணுவக் கட்டுப்பாடற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அரச நிவாரணம் பெறாத மக்களுக்கும் இந்நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்;

மல்லாவி, தேனாங்கண்டல், அக்கராயன், வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்து இருப்பதனால் இவர்களுக்கும் மூன்றுநாள் சமைத்த உணவும், ஒருவார கால உலர் உணவும் வழங்க அமைச்சர் ஜெயலத் அப்பகுதி அரச அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். [வ]

# 'சலன சித்திரம்' அமைப்பின் செயற்பாடுகள் யாழிலும் விரிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நகரில் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் 'சலனசித்திரம்' அமைப்பு இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தனித்து வழும் செயற்குழுக்களைக் கொண்ட திரைக்கலைச் சங்கங்களை நிறுவி வருகின்றது.

இவ்வரிசையில்யாழ்ப்பாண மாவட்டத்திலும் 'சலனசித்திரம் யாழ்ப்பாணம்' என்னும் பெயரில்ஒரமைப்பை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் ஒரு கட்டமாக, 'சலனசித்திரம்- யாழ்ப்பாணம்' அமைப்பின் வடமராட்சிப் பிரதேசக் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் கடந்த வாரம் வதிரி- புலவராவோடையில் நடைபெற்றபோது 9 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பொதுச் செயலாளராக பொ. ஸ்ரீகாந்தாராஜா, மேலதிக செயலாளராக ஜெ சசிதரன், நிதிச்செயலாளராக ச. இராசகன், நிர்வாகச் செயலாளராக ச.செல்வகுணசந்திரன் ஆகியோருடன் பிரசாரம், கல்வி, தொழில், மகளிர் விவகாரம், சிறுவர் விவகாரம், என்பவற்றுக்கும் ஒவ்வொரு செயலாளர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரைக்கலை நூலகம் அமைத்தல், திரைக்கலைத் தகவல் நிலையம் அமைத்தல், இலவச திரைப்படத் தொழில்நுட்ப வகுப்பு நடாத்துதல், மாதாந்த வீடியோ சஞ்சிகை வெளியிடுதல், இணையத்தளமொன்று ஆரம்பித்து இயக்குதல் என்பன இச்சங்கத்தின் உடனடி வேலைத்திட்டங்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இச்சங்கத்தில் இணைந்து இயங்க விரும்பும் இருபாலாரும், பொதுச் செயலாளர், 'சலனசித்திரம்- யாழ்ப்பாணம்' ஞானவில்லா, கரவெட்டி, மத்தி.கரவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று சலனசித்திரம் அமைப்பின் பொதுச் செயலாளர் க. தேவதாசன் தெரிவித்துள்ளார். (உ-106)

## பிரதம சிவாசாரியார் சிவபதம் அடைந்தார்

(காரைநகர்)

ஈழத்துச் சிதம்பரம்ஆலயத்தில் கடந்த 60வருடங்களாக பிரதம சிவாச்சாரியாராக இருந்து ஆன்மீகப் பணிபுரிந்த கணபதீஸ்வரக்குருக்கள் மங்களேசுவரக்குருக்கள் (வயது 93) கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை சிவபதமடைந்தார். (உ)

## மழைவீழ்ச்சி அளவுகள்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் யாழ்குடாநாட்டில் நேற்றுமுன்தினம் வரை ஆயிரத்து931மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சிநிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்களன்று மாத்திரம் 64மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் மறுதினம் 5.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (உ-19)

## திருவாசக ஒலிநாடா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர், தமிழகத்து ஓதுவார் மூர்த்திகள் பாடி வழங்கிய திருவாசகப் பாடல்களை ஒலிப்பதிவு நாடாவிலும் இறுவட்டிலும் (சி டி) பதிவு செய்து ஆலயங்களுக்குவழங்கி வருகின்றனர்.

அத்துடன், நால்வர் பெருமக்களின் திருவுருவப் படங்கள் மூவர்ணத்தில் அச்சேற்றி இலவசமாக வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது; (உ)

## சிரமங்கள் கொடுக்கும் கிடங்கு

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் ஒரு பகுதியில் பலகாலமாக கவனிப்பாரற்றுக் கிடக்கும் நீண்ட கிடங்கில் சில தினங்களாகப் பெய்த மழைவெள்ளம் தேங்கிக் நிற்கின்றது.

அண்மையில் நஞ்சு குடித்த ஒருவரை ஏற்றிக் கொண்டு காற்றாகப் பறந்து சென்ற ஓட்டோவொன்று அந்தக் கிடங்கில் விழுந்து குலுங்கியதில் அதன் சில்லு கழன்று விழுந்தது.

அவஸ்தைப்படுபவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் ஓட்டோவில் வந்தவர்கள் பெரிய சிரமப்பட்டனர்.

அந்த வெள்ளக் கிடங்கு பலருக்கு பலவிதப்பட்ட சிரமங்களைக் கொடுத்து வருவதாக அதன் அயலில் உள்ளோர் தெரிவித்தனர். (எ- 19)

# மோதல் தவிர்ப்பை அடுத்து மட்டு. மாவட்டத்தில் இரவு நேர பேருந்துசேவை

(மட்டக்களப்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மோதல்களை நிறுத்துக் கொண்டதை அடுத்து மட்டக்களப்பிலிருந்து தூர இடங்களுக்கான இரவு நேர பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்வுள்ளதாகத் தெரியவருகிறது.

நீண்ட காலத்தின் பின்னர், அரசும புலிகளும் மோதல்களைத் தவிர்த்துக் கொண்டதையடுத்து வீடுகளில் அடங்கி ஒடுங்கி இருந்த இளைஞர்கள் இரவு நேரங்களில் வீதிகளில் சுற்றித்திரிவதுடன் நத்தார் தினத்தன்றுநள்ளிரவு வேளைகளிலும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# திரைப்பட தொழில்நுட்ப இலவச பயிற்சி வகுப்பு

## இன்று நெல்லியடியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

இலவசதிரைப்படத்தொழில் நுட்ப பயிற்சி வகுப்பு இன்று பி.ப2.00மணிக்குநெல்லியடி மத்திய மகாவித்தியாலயவீதியிலுள்ள கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சலனசித்திரம்-யாழ்ப்பாணம் அமைபபினால் நடத்தப்படும் இவ்வகுப்பில் திரைக்கதை இயக்கம், ஒளிப்பதிவு, நடிப்பு, இசை ஆகிய திரைப்படத் தொழில் நுட்பங்கள் தொடர்பான விரிவுரைகள் மற்றும் பயிற்சிகள வழங்கப்படவுள்ளன.

இவ் வகுப்பில், ஆர்வமுள்ள இருபாலாரும் பங்குபற்றலாம் என்றும் ஏனையோர் பொதுச்செயலாளர் சலனசித்திரம் யாழ்ப்பாணம் ஞானவில்லா கரவெட்டி மத்தி கரவெட்டிஎன்னும்முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் க.தேவதாசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளையாழ்நகரிலும் இவ் வகுப்புகளை ஆரம்பிக்கும்முன்முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-106)

# நிறுவனங்கள் கதவடைப்பு கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் பரிதவிப்பு

[கொழும்பு]

அரசமற்றும் அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்தபெருவாரியான ஊழியர்களுக்கு நிறுவனங்கள் கதவடைபபு செய்து வருவதனால்இவர்கள் வேலையிழக்கும் நிலை தோன்றியுள்ளது.

இ.போ.ச.வின ஊழியர்கள் தமதுபணிநிலையங்களுக்குள் செல்வதற்கு ஆயுதப் படையினரின் உதவியை நாடவேண்டியுள்ளதுடன் வேலை செய்த மாதத்திற்குரிய சம்பளத்தை எடுக்கக்கூட தமது அலுவலகங்களுக்கு செல்ல முடியாமல் ஜாதிக சேவகசங்கமய என்ற ஐ.தே.க.வின் தொழிற் சங்கத்தினரே இவர்களை தடுத்து வருகின்றதாகக் கூறப்படுகின்றது.

இதுபற்றிமுன்னாள் அமைச்சர் அலவி மௌலானா தலைமையிலான பொ.ஐ.மு எம்.பிக்கள் குழுவொன்று மனித உரிமைஆணைக்குழுத் தலைவர் பெய்ஸ்முஸ்தபபாவைச் சந்தித்து முறையிடத் தீர்மானித்துள்ளது.

இக்குழுவில்பட்டிவீரக்கோன் ராஜா கொலுரே. தினேஷ் குணவர்த்தன, டீ.எம்.ஜயரதன ஆகியோர் இடம் பெறுவர். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### பத்துலட்சம் உண்டோ?

உன்மகளும் என்மகனும் ஒருயிரும் ஈருடலும்
என்றபெரும் உண்மையினை யானறிவேன்-என்றாலும்
மைத்துனனே! உன்றன் மகளுக்குச் சீதனமாய்
பத்துலட்சம் உண்டோ பகர்.

-பழையவன்

### கட்டார் தொ. கா. நிலையத்தால்
# பின்லேடனின் உரை அடங்கிய ஒளிப்பதிவு நாடா வெளியீடு

[கட்டார்]

ஒஸாமாபின்லேடன் உரை நிகழ்த்தும் வீடியோ ஒளிப்பதிவு நாடா ஒன்றினை கட்டார் தொலைக்காட்சி ஒன்று நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

அந்தஒளிநாடாவில்என்னையும், எனது மக்களையும் இழிவாகப் பேசுபவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவேன்.

பலஸ்தீனர்கள்மீதுஇஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களுக்கு அமெரிக்கா அனுசரணை வழங்குவதை நிறுத்தும்வரை பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடரும் என்று ஒஸாமா பின்லேடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளைஇந் தொலைக் காட்சி வெளியிட்ட வீடியோ நாடாவில் பின்லேடன் மிகத் தெளிவாகவும் ஆனால் அது எங்கு எப்போது பதிவு செய்யப்பட்டதென்பது தெரியவில்லை என்பதால்அதைநம்ப முடியாதுள்ளது என்றும்அமெரிக்கா தெரிவித்துள்ளது.

[உ-7]

# ஜெயலலிதாவிற்கு எதிரான நிலக்கரி ஊழல் வழக்கு தள்ளுபடி

சென்னை]

செல்வி ஜெயலலிதாவையும் வேறு 9பேரையும்பல கோடி ரூபா நிலக்கரி ஊழல் வழக்கிலிருந்து சென்னைதனி நீதிமன்றம் விடுவித்துள்ளது.

முன்னைய தி.மு.க. அரசினால் இவர்கள் மீதுபலகோடி ரூபா ஊழல் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி தீர்ப்பு வழங்கிப் பேசுகையில், ஜெயலலிதா மீதும் மற்றையோர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் இவர்களை வழக்கிலிருந்து விடுவிக்கிறார் என்று தெரிவித்தார்,

தீர்ப்பினையடுத்துநீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்தோரிடம் செல்வி ஜெயலலிதாபேசுகையில்,

தான் குற்றமற்றவள் என்பதை நீதிபதியின்தீர்ப்பு மீண்டும் உறுதி செய்துள்ளதென்றும் தான் நிரபராதி என்றும் தெரிவித்தார்.

இதேவேளை என்மீது தி.மு.க.அரசுவேண்டுமென்றே சோடித்த பொய்யானவழக்கு என்றும் தெரிவித்தார். (து)

# நேபாள மோதல்களில் சிறுவர்உட்பட ஐவர் பலி

(காட்மண்டு)

நேபாளத்தில் இடம்பெற்ற இரண்டு வன்முறைச்சம்பவங்களில் இரண்டுசிறுவர் உட்பட 5பேர் பலியாகியுள்ளனர்.

மேற்குநேபாளத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல்களை முறியடித்த வேளையிலேயே இவர்கள் பலியாகியுள்ளனர். (உ-7)

# இஸ்ரேல் ஜோர்தான் எல்லைப்பகுதியில் மோதல்

(ஜெருசலேம்)

இஸ்ரேல்-ஜோர்தான் எல்லையில் இடம்பெற்ற மோதல்களில் இஸ்ரேலிய படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தை அடுத்து ஜோர்தான் எல்லைப் பகுதியினுள் இஸ்ரேலிய இராணுவம் தீவிர தேடுதல்களைமேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக ஜோர்தான் கருத்துக் கூறுகையில தமது படையினர்எவரும் இஸ்ரேலியப் படையினர் மீது தாக்குதல் நடத்தவில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வருடத்தில் இஸ்ரேலிய ஜோர்தான் எல்லையில இடம பெற்றமுதலாவது மோதல் சம்பவம்இதுவாகும் (உ-5)

# கச்சதீவு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண ரணில் ஆர்வம்

(புதுடில்லி)

கச்சதீவு தொடர்பான பிரச்சினைக்கு விரைவில தீர்வுகாணப்படுமென்று பிரதமர் ரணிலவிக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

புதுடிலலி சென்றுள்ள பிரதமர் ரணிலவிக்கிரம சிங்கா இநதியவர்த்தக அமைச்சர் முரசொலி மாறனைச் சநதிதது பேச்சு வார்த்தைகள நடததியபின் செய்தியாளர்களிடம கச்சதீவுப பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுகையில் இரண்டுகுழுக்கள இப்பபிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைக்கப் படுமஎன்றும ஜனவரிமாதம் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுமெனறும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியஇலங்கை வர்த்தக அமைச்சர்கள் வருகின்ற பெப்ரவரியில் சநதித்து இருதரப்பு வர்த்தகம தொடர்பான பேச்சு வார்த்தைகள இடம்பெறும் என்றும் தெரிவித்தார். (து)

# போதைப்பொருட்கடத்தலில் ஈடுபட்டோர் கைது

(மணிலா)

மணிலாவுககும், சீனாவுக்குமிடையே போதை மருந்துக் கடத்தலில ஈடுபட்ட குமபலொன்றைப் பிடித்து விட்டதாக மணிலா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகரானமணிலாவில பொலிஸார் சநதேகத்துன் பேரில் திடீர் சோதனை நடத்திய போது 7 சீனர்கள பிடிபட்டனர்.

இவர்களுடன் பெருமளவு போதைப பொருட்களும் கைபபற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிததுள்ளனர்.

இதேவேளை, இரு நாடுகளுககிடையேயும இடம் பெறும போதைமருந்து கடத்தலைத் தடுக்க சீனப் பொலிஸாரும அதிகாரிகளும் உதவ வேண்டும் என்று மணிலாப் பொலிஸார் கேட்டுள்ளனர். (து)

### காலை எழுந்தவுடன் சிரிப்பு

(புதுடில்லி)

இந்தியா முழுவதிலுமுள்ள சிரிப்புக் கழகங்களின் உறுப்பினர்கள் ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் அரைமணிநேரம குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கின்றனராம்.

இச் சிரிப்புக் கழகத்தின் மாநாடு அண்மையில பெங்களூரில் நடைபெற்றது. இதன் போது இக்கழகத்துன தொளாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் சிரித்தபடியே இருந்தனராம்.

இந்தியாவில் முதல்முதலாக சிரிப்புக்கழகத்தை ஆரம்பித்தவரான டாக்டர் மதன் கத்தாரியா இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்;

சிரிப்பதனால் பலநோய்கள் அற்றுப்போவதாகவும் சிரிப்பில் உள்ள பல நுட்பங்களை அறிந்து கொள்வதற்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக இக் கழகம் அமைந்துள்ள தென்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# இந்தோவில் ரயில் விபத்தில் 45 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் இரு ரயில்கள் மோதியதில் 45பேர் இறந்துள்ளனர்.

இந்தோனேஷிய ஜாவாமத்திய ரயில் நிலையத்தில் நின்ற ரயிலுடன் எதிரே வந்த பயணிகள் ரயில் மோதியதில் இந்த 45 பேரும் கொல்லப் பட்டார்கள.

இறந்தவர்களில் வெளிநாட்டவர்களும் அடங்குவர். (து)

### மார்கழியில்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வைகறை நீராடுவதிலும், திருப்பாசுரங்கள் ஓதிவழிபாடுகள் செய்வதிலும் ஆர்வமும், பக்தியும் உடையவர்களாக விளங்குகிறார்கள்.

மேலும் திருவாதவூரர் புராண படனங்களும் ஆலயங்களில் நடைபெறுவதுசிறப்பமசமாகும், பல்வேறு சிறப்புக்களும் மிக்க மார்கழித் திங்களில் நாமும் வைகறைநீராடி வானோரைப் புகழ்ந்கேத்தி வழிபாடுகள் செய்து நற்பேறடைய முயல்வோமாக.

## விளையாட்டு செய்திகள்

# விதிகளை மீறினாராம்; இங்கிலாந்து வீரர் அவுட்

(புதுடில்லி)

பெங்களூரில் நடைபெற்ற இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது பந்தை கையால் கையாண்டதினால் இங்கிலாந்து வீரர் மைக்கேல் வாகன் ஆட்டமிழந்தார்.

கையால் பந்தினை கையாண்டமுறையில் தனக்கு அவுட் அளிக்கப்பட்டதால் அதிருப்தி அடைந்துள்ள வாகன் இச்சம்பவம் பற்றி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்;

தான் பந்தைக் கையினால் தடுக்கவே இல்லை எனவும் தனது கால் பேடில் பட்டு கீழே விழுந்த அந்தப் பந்து ஸ்டம்பில் படுவதற்கான சாத்தியங்கள் கொஞ்சம் கூட இல்லை எனவும் சோட் லெக் திசையில் இருந்த வீரருக்கு உதவுவதற்காக அவரிடம் பந்தைக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் பந்தை எடுத்த போது அப்பில் செய்து விட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் பந்தைக் கையால் கையாண்ட குற்றத்தினால் ஆட்டமிழந்த ஏழாவது வீரர் வாகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# நியூசிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் கையில் காயமுற்றார்

(வெலிங்டன்)

பங்களாதேஷ்-நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் நதன் அஸ்ரில் காயமடைந்துள்ளார்.

களத்தடுப்பின் போது வேகமாக ஓடிச் சென்று வீழ்ந்த பந்தை தடுக்க முயன்ற சமயமே கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

எக்ஸ்-ரே சோதனையில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் பங்களாதேஷிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அஸ்ரில் விளையாடமாட்டார் எனவும் இவருக்குப் பதிலாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹார்ன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

முதலாவது டெஸ்ட் போட்டியை வென்றதன் மூலம் நியூசிலாந்து அணி 1.0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# இவ்வாண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரராக போர்த்துக்கல் நாட்டவர்

[லண்டன்]

சர்வதேசஉதைபந்தாட்டச் சங்கத்தினால் இவ்வாண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரராக போர்த்துக்கல் வீரர் லூபிஸ் பிகோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

130 நாடுகளைச் சேர்ந்த உதைபந்தாட்டப் பயிற்சியாளர்கள், இவ்வாண்டின் சிறந்த மூன்று வீரர்களை தெரிவு செய்தனர்.

அதில் பிகோ முதலிடமும், இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் இரண்டாமிடமும் ரால் மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.

போர்த்துக்கல் நாட்டவர் ஒருவர் இவ் விருதைப் பெறுவது இதுவே முதல் தடவை.

இது போன்று, மகளிருக்கான இவ்வாண்டிற்கான சிறந்த வீராங்கனைக்கான விருது அமெரிக்காவின் மரியேல் மார்க்ரெட் ஹாமுக்கு வழங்கப்பட்டுள்ளது;

சீனாவின்சுன்-வென் இரண்டாம் இடத்தையும் மற்றொரு அமெரிக்க வீராங்கனையான டிப்னி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

அமெரிக்க அணியின் நட்சத்திர வீராங்கனையான 29 வயது ஹாம் 219 போட்டிகளில் விளையாடி 219 கோல்களை அடித்துள்ளார்.

சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தின் சிறந்த அணிக்கான விருது ஹொண்டுராஸ் அணிக்கு வழங்கப்பட்டது. (உ-2)

# பெண்கள் கிரிக்கெட் போட்டி

(கொழும்பு)

எதிர் வரும் ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பெண்கள் கிரிக்கெட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் பெண்கள் அணியும் இலங்கை பெண்கள் அணியும் மோதவுள்ளன. இலங்கை அணிக்கு சுதர்சினி சிவநாதன் தலைமை தாங்கவுள்ளார்.

இரு அணிகளும் ஒரு டெஸ்ட் போட்டியிலும் மூன்று ஒரு நாள் போட்டியிலும் விளையாடவுள்ளன.

டெஸ்ட் போட்டி 20 ஆம் திகதியும் ஒரு நாள் போட்டி 26, 28, 30 ஆம் திகதிகளிலும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. (உ-2)

# வெடிமருந்து ஏற்றிச்சென்ற வாகனம் வெடித்து சிதறியது 9 பேர் பலி 14 பேர் படுகாயம்

(பீக்கிங்)

சீனாவின் தென்கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக வெடிமருந்தை ஏற்றிச் சென்ற ட்றக்வண்டி ஒன்று திடீரென வெடித்துச் சிதறியதில் 9 பேர் பலியானதுடன் 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சோதனைச்சாவடி ஒன்றில் இரும்புக்கம்பியினை பயன்படுத்தி பொலிஸார் சோதனை மேற்கொண்ட போது இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் முதல் 6 மாத காலத்தில் மட்டும் சுமார் 47 ஆயிரம் பேர் வெடிவிபத்துக்களால் பலியாகியுள்ளனர் என்று சீன அரச தகவல் தெரிவித்துள்ளது. (உ-7)

## கிணறுகளுக்கு குளோரின் இடல்

[ஆனைக்கோட்டை]

சாவல்கட்டு, சுதுமலை தெற்கு, முள்ளி பகுதிகளிலுள்ள வீடுகளின் கிணறுகளுக்கு கடந்த புதன்கிழமை முதல் சுகாதாரத் தொண்டர்களால் குளோரின் இடப்பட்டு வருகின்றது.

[உ-201]

## மின்வலையில் சிக்கி மரணம்

(கண்டி)

காட்டுப்பன்றிகளை பிடிப்பதற்காக விரிக்கப்பட்டிருந்த மின்வலையில் சிக்கியவர் உயிரிழந்துள்ளார்.

கண்டி நுகவெல பிரதேசத்தில் நடைபெற்றது இச்சம்பவத்தில் ரட்ணம்பொன்னையா (வயது-55) என்பவரே மரணமடைந்துள்ளார்.

(உ)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வருடம் இடம்பெற்ற அமுக்க வெடிச்சம்பவங்களில் 9பேர் பலி

[யாழ்ப்பாணம்]

இவ்வருடத்தின் இற்றைவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அமுக்க வெடிச்சம்பவங்களில் 9பேர் கொல்லப்பட்டிருப்பதாக யாழ்.செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன

கடந்த செப்ரெம்பர்மாதம் இருபாலையில்ஒட்டோஒன்று அமுக்க வெடியில் சிக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6பேர் மற்றும் அதன் சாரதி உட்பட7 பேரும், சாவகச்சேரி, இளவாலைச் சம்பவங்களில் முறையே ஒவ்வொருவருமாக9பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், குடாநாட்டில் இவ்வருடத்தில் இடம்பெற்ற 76 மிதிவெடிச் சம்பவங்களில் 90பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இவர்களில் 52பேர் தமது கால்களில் ஒன்றை இழந்துள்ளதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மிதிவெடிச் சம்பவங்கள் தென்மராட்சிப் பகுதியலேயே இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

[உ-10]

## செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். இந்துக் கல்லூரி நிலைய, கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரி வில்வநாதன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு நாளை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ-5)

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம)

கடந்த 24 ஆம் திகதியன்று சாவகச்சேரி நீதுவான் நீதிமன்றப் பொலிஸாரால்இனமதெரியாத சடலம்ஒன்று ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாகவும்,

அதனை உறவினர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். அரசினர் பொது வைத்தியசாலைப பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ)

## அமைச்சரின் பணிப்பில் சமைத்தஉணவு விநியோகம்

தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக, முகாம்களில் இருந்து வெளியேறி பொதுவிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளமக்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சியினர் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் பணிப்பின் பேரில் இவ்வுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

(உ-23)

## நத்தார் தினக் கவிதை

### நற் செய்தி பரப்பிய யேசு

விண்ணரசின் நற்செய்தி பாரினிலே பரப்பிடவே
வட்டக் குடில் மீது உதித்தாரே யேசுபாலன்
கண்மணியாய் இறைபணியை கனிவோடு மக்களுக்கு
காலமெல்லாம் காத்திருந்து நாதனவர்
போதித்தார்
தண்ணீரை ரசமாக்கி தொழுநோயை குணமாக்கி
தூயபணி நிறைவுகண்ட தேவமகன் திருவுள்ளம்
எண்ணற்ற சோதனையால் தோள்சுமந்த
சிலுவையிலே
ஏசுபிரான் மரித்திடவே உயிர்பெற்று
இறைவனானார்.

அல்லையூர் கே. ஆர். திருத்துவராஜா

## 'வலம்புரி'க்கு எம் வாழ்த்து

சங்குகளின் நாயகமாய்ச் சங்கையுடன் ஆழியிலே
தங்கும் வலம்புரிச் சங்கென்றால் – இங்குள்ள
நாளிதழ்கள் யாவுக்கும் நாயகமாய் என்றென்றும்
வாழும் 'வலம்புரி'க்கெம் வாழ்த்து;

'பழையவன்'

## வவுனியாவுக்கு வழக்கு மாற்றம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், மலையகம் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பாலசிங்கம் புஸ்பராசா, தவசி தவச்சந்திரன் ஆகியோர் மீதான வழக்கு, வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

[உ-12]

## நிவாரண விநியோகம் ஜனவரி ஆரம்பத்தில்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதத்துக்கான உலர்உணவு நிவாரண விநியோகத்தை மாதஆரம்பத்திலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 'பிறைட்ஒவ் சவுத்' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தினை நோக்கிப் புறப்பட்டிருப்பதாகவும்,

அரிசி, சீனி, பருப்பு, பால்மா உள்ளிட்ட 3ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் இவ்வாறு கப்பலில் எடுத்து வரப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

[உ-10]

## திருவெம்பாவை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சித்தியம்பதி அண்ணமார் தேவஸ்தானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மார்கழிதிருவாதிரை விழா அதிகாலை5.00 மணிக்கு விசேட அபிசேக பூசைகளுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பஜனை திருவெம்பாவை ஓதல் திருவூஞ்சல் வெளி வீதியுலா ஆகியனவும்,

மறுதினம் கிராம ஊர்வலமும் இடம் பெறவுள்ளன.

[உ]

★ ★ ★

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் கடந்த 21ஆம்திகதிமுதல் அதிகாலை 5.00மணிக்கு திருவெம்பாவை பூசையும், திருவெம்பாவை ஓதலும் இடம்பெற்று வருகின்றது.

இறுதி நாளான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட அபிசேக ஆராதனையும் திருவூஞ்சலும்இடம்பெறவுள்ளது.

(உ-120)

## 8மாணவர்களைக்கொன்ற நபருக்கு மரணதண்டனை சீன நீதிமன்றம் விதிப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த ஜூன் மாதத்தில் 8 பாடசாலை மாணவர்களைக் கத்தியால் குத்திக் கொன்ற நபருக்கு ஜப்பானிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

38 வயதான இந்த நபர், நீதிமன்றில ஆஜர் செய்யப்பட்டபோது, கொலையுண்ட மாணவர்களின் பெற்றோர்கள் நீதிமன்றின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட மேற்படி நபர் தனது செயலுக்காக மரண தண்டனையை ஏற்கத்தயாராகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஜப்பானில் ஒன்றுக்கு மேற்பட்ட கொலைகளைப் புரிந்தவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது;

(உ-5)

## முன்னைய அரசின் அரசஊழியர்சம்பளஉயர்வு நடைமுறையில் மாற்றமில்லை

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கம்அறிவித்திருந்தசம்பள உயர்வை தொடர்ந்தும் அமுல் படுத்துவதென புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும்கைத்தொழில் அமைச்சருமானப் பேராசிரியர்ஜி.. எல்.பீரிஸ்.தெரிவித்துள்ளார்

தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில்நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற் கண்டவாறுதெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் முன்னைய அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு பொருளாதாரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும் சம்பள உயர்வைத் தொடர்ந்தும் வழங்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

## குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்க்குபொதுமன்னிப்பு வழங்க டக்ளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மோசடிக்கார முகவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் கடவுச்சீட்டு மற்றும் குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்;

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் கே.என்; டக்ளஸ் தேவானந்தா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் நீதி அமைச்சர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார ஆகியோருக்கு எழுதியுள்ள அவசர கடிதமொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினையின் பக்க விளைவுகளில் ஒன்றாக தமிழ் இனத்தைச் சேர்ந்த பலர் நாட்டிலிருந்து வெளியேற முனைப்புக் காட்டுவது இரகசியமானதல்ல.

இத்தகையவர்கள் சட்டத்திற்கு புறம்பான வழிகளை நாடத்தளளப்பட்டிருக்கின்றனர். இந்த அவல நிலையை மோசடிக்கார பயண முகவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

இவர்களால் ஏமாற்றப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்கானவர்கள் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் விதிகளை மீறிய தான குற்றச்சாட்டின் கீழ் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பிணையில் விடுதலையாவதற்குக் கூட சட்ட விதிகள் தடையாக இருக்கின்றன. இத்தகைய சட்ட விதிகள் திருத்தப்படுவதற்கு மேலும் காலதாமதமாகும் என்பதால் தயவுசெய்து இத்தகையவர்களை பொது மன்னிப்பு ஒன்றின் மூலம் விடுவிப்பதற்கு சிபார்சு செய்யும்படி வேண்டுகிறேன் என்றுள்ளது.

(உ)

## மீள் பரீட்சைகள் ஜனவரியில்

(சண்டிலிப்பாய்)

1994. 95 ஆம் கல்வியாண்டில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பதிவினை மேற்கொண்ட கணக்கியலுக்கான உயர் தேசிய டிப்ளோமா (HNDA) பகல்-ஆங்கில மொழிமூல, மாலை-தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும், வர்த்தகத்திற்கான உயர் தேசிய டிப்ளோமா (HNDC) மாணவர்களுக்குமான 2 ஆம், 3 ஆம் வருட மீள்பரீட்சைகள், மூன்று வருடங்களின் பின்னர் எதிர்வரும் ஜனவரிமாத நடுப்பகுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-125)

## "கலாதரிசனம்" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் கல்லூரி யாழ். பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவ ஒன்றியத்தின் "கலா "தரிசனம்" நூல் வெளியீடு எதிர்வரும்30ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு ஒன்றியத்தலைவர் செ. கமலக்கண்ணன் தலைமையில் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கே. தேவராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்தபரமாச்சார்ய சுவாமிகளும், வணபிதா ரி. தேவநேசன் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரை, ஆய்வுரைகளை முறையே சோ. பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

(உ)

## மத்தியவங்கியால் வங்கிவீதம் 18 ஆககுறைப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி அதன் வங்கி வீதத்தை 23 இல இருந்து 18 வீதமாகக் குறைத் துள்ளது.

வர்த்தக வங்கிகளில்ஏற்பட்டுள்ளதற்காலிக நிதி நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் நேற்று முதல் இந் நடைமுறை பின்பற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# மீண்டும் உலகின் அதிபார குத்துச்சண்டை சம்பியனான இங்கிலாந்தின் லெனெக் லூவிஸ்

ம. சுபாஸ்கரன்
புன்னாலைக் கட்டுவன்

முன்னாள் அதிபார குத்துச் சண்டை சம்பியனான லெனக் லூவிஸ் மீண்டும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் 18.11.2001 அன்று நடந்த போட்டியில் ஹசீம் ரஹ்மானை நான்காவது சுற்றில் வீழ்த்தி நொக் அவுட் முறையில் வெற்றி பெற்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் லூவிஸ் இற்கும் ரஹ்மானிற்குமிடையில் நடந்த போட்டியில் ரஹ்மான் யாரும் எதிர்பாராத வகையில் லூவிஸை தோற்கடித்து உலக சம்பியனாகி இருந்தார். போட்டியின் போது லூவிஸ் 20-1 என்ற நிலையில் முன்னிலை வகித்துக் கொண்டிருக்கும் போது ஐந்தாவது சுற்றில் ரஹ்மான் கொடுத்த பலமான குத்தினால் லூவிசுக்கு கன்னத்தில் காயம் ஏற்பட்டது. இதனால் பயிற்சியாளர் லூவிசை போட்டியிட அனுமதிக்காமையால் ரஹ்மான நொக் அவுட் முறையில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது இதனால் ரஹ்மான் உலக அதிபார குத்துச் சண்டை சம்பியன் பட்டத்தை வென்றார்.

ஆயினும் தான் தோற்றது தற்செயலானது என்று கூறிய லூவிஸ் மீண்டும்போட்டியிட ரஹ்மானை அழைத்தார். இது தொடர்பாக இருவரும் கடும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு தாமே வெல்வது உறுதி என்று சூளுரைத்தனர். தான் இப்போட்டியில் தோற்றால் இனி மேல் குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொள்ள மாட்டேன் என்று லூவிஸ் அறிவித்தார்.

இது தொடர்பாக இருவரும் கலந்து கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றும் லண்டனில் நடைபெற்றது. அதில் இருவரும் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட அது கைகலப்பாக மாறியது பின்னர் அங்கிருந்த அலுவலகர்களால் அது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இருவரும் கைகலப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து ரசிகர்களிடம் கடும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் நடந்து முடிந்த போட்டி ஏற்படுத்தி இருந்தது இது மட்டுமன்றி இப்போட்டியில் யார் வெல்வார் என்ற எதிர்பார்ப்பும் ஏற்பட்டது.

இவற்றிற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்தாற் போல் 18.11.2001 அன்று நடந்த போட்டியில் லூவிஸ் வென்றார். இப்போட்டி ஆரம்பமானதும் முதல் லூவிஸின் கையே ஓங்கியிருந்தது லூவிஸ் விட்ட சரமாரியான குத்துக்களால் ரஹ்மான் நிலை குலைந்து போயிருந்தார் எனினும் லூவிசை நிலை குலையச் செய்ய ரஹ்மான் பலதடவைகள் முயன்றார் என்றாலும் லூவிஸ் தனது பலத்தை மேலும் ஓங்கச் செய்து விட்ட பலமான குத்தினால் ரஹ்மானின் தாடை உடைந்தது இதனால் மேலும் போட்டியிட விரும்பாத ரஹ்மான் விலக நான்காவது சுற்றில் நொக்அவுட் முறை மூலம் லூயிஸ் வெற்றி பெற்று மீண்டும் தனது சம்பியன் பட்டத்தை வென்றதுடன் தனது சபதத்தையும் நிறைவேற்றி உள்ளார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய லூவிஸ் ரஹ்மானை வீழ்த்தும் குறிக்கோளுடனேயே போட்டியில் ஈடுபட்டேன் கடந்த பலமாத காலமாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டதன் விளைவாக ரஹ்மானை இலகுவாக வீழ்த்தும் வாய்ப்பு கிடைத்தது போட்டியின் ஆரம்பத்திலேயே அவரது பலவீனங்களைக சாதகமாகக்கொண்டு குத்துக்களை விட்டேன் இதனால் நிலைகுலைந்த ரஹ்மான் வீழ்த்தப்பட்டார் வெற்றி எனதானது என்கிறார் மீண்டும் உலக ஹெவிவெயிட் சம்பியன் பட்டத்தை வென்ற மகிழ்வுடன். இந்த வெற்றி மூலம் லூவிஸ் மூன்று முறை இப்பட்டத்தை வென்ற பெருமையும் பெற்றுள்ளார். இதற்கு முன் முகமது அலி இவண்டர் ஹொலிபீல்டு ஆகியோர் தலா மூன்றுமுறை இப்பட்டத்தை வென்றிருந்தனர் இதேவேளை லூவிஸ் இற்கும் டைசனுக்குமிடையான போட்டி 2002 ஏப்ரல் 06 இல் நடைபெறுவதற்கும் ஏற்பாடாகி உள்ளது.

| லெனெக் லூவிஸ் | | ஹசீம் ரஹ்மான் | |
|---|---|---|---|
| நாடு : | இங்கிலாந்து | நாடு : | தெ. ஆபிரிக்கா |
| வயது : | 35 | வயது : | 29 |
| நிறை : | 114 கிலோ | நிறை : | 108 கிலோ |
| நொக் அவுட் மூலமான வெற்றி: | 30 தடவை | நொக் அவுட் மூலமான வெற்றி : | 29 தடவை |
| உலக சம்பியன்: | 3முறை | உலகசம்பியன்: | ஒருதடவை |

## சிவசிதம்பரம் 5ஆம் திகதி இலங்கை வருகை

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரம் ஜனவரி மாதம் 5ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கைவரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை வரும் இவர் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வாரென்று தமிழர்விடுதலைக்கூட்டணி வட்டாரங்களில்இருந்து தெரியவருகிறது. (உ 5)

## இந்து கலாசார அமைச்சு பம்பலப்பிட்டியில்

(கொழும்பு)

இந்துசமய விவகாரஅமைச்சின் புதிய அலுவலகம் கொழும்பு பம்பலப்பிட்டி காலிவீதி இலக்கம் 248 1/1 என்ற கட்டடத்தின் இரண்டாம் மாடியில் இயங்குவதாக மேற்படிஅமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்தின் முதலாம் மாடியில் இந்துசமயகலாசார அலுவலர்கள திணைக்களமும இயங்குகின்றது.

இந்துசமயவிவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் ஆகியோரோடு மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளலாமெனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். [இ-4]

## அதிருப்தியுற்றவாலிபர்குழு தினக்கதிர் பத்திரிகை காரியாலயம்மீது, தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில்இருந்துவெளிவரும் தமிழ்பத்திரிகையான தினக்கதிர் காரியாலயம் மீது இளைஞர் கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியதில் பத்திரிகையாசிரியரான ரி.சிவராம் மற்றும், எஸ்.விஜயகரன் ஆகியோர்காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது நேற்றுமுன்தினம் மாலை குறிப்பிட்ட பத்திரிகை அலுவலகம் முன்பாகவுள்ள பிரதான வீதியில் பட்டாசு கொளுத்திய வாலிபர்கள் குழுவொன்றுடன் வாய்த்தர்க்கம ஏற்பட்டதாகவும் இதனை அடுத்து இரவு11மணியளவில் பொல்லுகள், தடிகள் சகிதம் வந்த இளைஞர்குழு வாசலில் நின்று பத்திரிகையாளரைத் தாக்கியதுடன் அலுவலக கண்ணாடியன்னல்கள கதவுகளையும் உடைத்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இச்சம்பவத்துடன் அரசியல்வாதிகளுக்கோ வேறுகுழுக்களுக்கோ தொடர்பு ஏதும் இல்லைஎன தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடைய3பேர் கைதுசெய்யப்பட்டு பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். [உ-7]

## டெங்கு காய்ச்சல் பாதிப்பு தொடர்கிறது

(கொழும்பு)

எம்பிலிபிட்ட வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் உட்பட 7பேர்டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்குக் காய்ச்சலினால் பலர் இறந்துள்ளதை அடுத்து டெங்குக் காய்ச்சலைக்கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டமொன்றைசுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-9)

## காணாமற் போனோரின் உறவினர் குரல்களுக்கு செவிசாயுங்கள்

### டக்ளஸ் பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினரால் கைதாகி பின்னர் காணாமற்போனவர்களின விவகாரம நீண்டகாலமாக முடிவு எதுவுமின்றிநீடிப்பது கவலைக்குரியதாகும் காணாமற் போனவர்களின் உறவினர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த விவகாரத்திற்கு பரிகாரம் காண ஆவன செய்யப்பட வேண்டும்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம மந்திரி ரணில்விக்கிரம சிங்காவுக்கு எழுதியுள்ள அவசர கடிதமொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் கைது செய்யப்பட்டு காணமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கடந்த சனியன்று எனக்குகடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது, இவர்களின்துயரத்திற்குமுடிவு காணும் வகையில் சோகத்தைத் துடைக்கும் வகையிலும கடந்த காலத்தில் நாங்கள் பல்வேறு முயற்சிகளையும மேற்கொண்டிருந்தோம் எனினும் இது விடயம் முடிவின்றி தொடர்ந்து செலவதாகவே உள்ளது எனவே நீங்கள் இவ் விவகாரத்தை ஆழ்ந்து பரிசீலனை செய்வதோடு காணாமற் போனவர்களின் மற்றும் பாதுகாவலர்களின் துயரத்திற்கும் பரிகாரம்காண ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## கடலுக்கு செல்வதற்கு கட்டுப்பாட்டை நீக்குக

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மீனவர்கள் இன்றைய கட்டுப்பாட்டு நடைமுறையின்படி மீன்பிடித்தொழில் செய்வதற்கு கடலுக்கு செல்ல முடியாதிருப்பதால அவர்களது பெருமபாலான குடும்ஙகள பட்டினியால் வாடுகின்றன எனவே அவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கு கட்டுப்பாட்டைத் தளர்த்துமாறு இராணுவஅதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயமூர்த்தி புனர்வாழ்வு. அகதிகள மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பியுள்ளகடிதத்தில் தெரிவித்துளளர்.

வடபகுதியில் சிலமுக்கியமான பாடசாலைகளுள்இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் அவர்களை அப் பாடசாலைகளிலிருந்து விரைவில் வெளியேற்ற நடவடிக் எடுக்குமாறும் அக்கடிதத்தில் அவர் அமைச்சரைக் கேட்டுள்ளார் (எ)

## தென்னிலங்கையில் சந்தைப்படுத்த உள்ளூர் உற்பத்திகள் கப்பலில்ஏற்றப்படுகின்றன

(மந்திகை)

கடந்தசில தினங்களாகதொடர்ந்து பெய்த மழை ஓய்ந்ததையடுத்து யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களை தென்னிலங்கைக்கு அனுப்புவதற்காக கப்பலில் ஏற்றும்பணி துரிதமாக நடைபெற்றுவருகின்றது.

'மொரிஸ்ஹண்டி' கப்பலில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு எடுத்துவரப்பட்ட உணவுப்பொருட்கள் இறக்கப் பட்டவுடன் உள்ளூர் உற்பத்திகளை ஏற்றிக்கொண்டு தென்னிலங்கை செல்லவுள்ளதாக துறைமுகவட்டாரங்கள தெரிவித்துளளன.

யாழ் மாவட்டத்தில் உற்பத்திசெய்யப்பட்டவெங்காயம் புகையிலை, பனங்கட்டி, கடலட்டை, இறால் என்பன இவ்வாறுஏற்றப்பட்டுவருகின்றன.

அதேவேளை கப்பலில் எடுத்துச் செல்வதற்காக பொதிசெய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தவெங்காயம் கடந்தசிலதினங்களாக தொடர்ச்சியாக பெய்தமழையினால் அழுகியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## கல்வியியல் கல்லூரி இறுதி பரீட்சை பெப்ரவரியில்

அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளிலும் 1999 - 2002 ம் ஆண்டுகாலப்பகுதியில் ஆசிரிய பயிற்சி பெறும் ஆசிரியமாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை வருகிறஆண்டு பெப்ரவரி மாதம் 21ம்திகதி நடைபெறவுள்ளதாக ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியின்பீடாதிபதிசு.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வழமையாகடிசம்பர்மாதத்தில் நடைபெறும் இப் பரீட்சை, இம்முறை இருமாதங்கள் பிற்போடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-4)

## மலசலகூடம் பூட்டு இடம்பெயர்ந்தமக்கள் அவதி

(மந்திகை)

கடந்தசில தினங்களாக பெய்த மழையினால் முகாம்களிலிருந்து இடம்பெயர்ந்து கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தங்கியுள்ள மக்கள் மலசலகூட வசதி இன்றி இயற்கை கடன்களை கழிப்பதற்கு பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

மேற்படி பாடசாலையிலுள்ள மலசலகூடங்கள் பூட்டப்பட்டுள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

செய்தக்க அல்ல செயக்
கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்

- குறள்

வலம்புரி

# புலிகளுடன் முதலில் பேசுக

2002 ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். ரணிலின் இக்கருத்து தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படாதவரை பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தவித பயனுமில்லை என்ற கோதாவில் கூறப்படுகிறது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் எவையென இனங்காண்பதிலும், அதனை நிவர்த்தி செய்வதிலும், ஓர் கருத்திட்டம் தயாரிப்பது அவசியமாகும். வெறுமனே உணவுத்தேவைகளை மட்டும் தமிழ் மக்கள் தமது தேவையாகக் கொள்ளவில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பொறுத்தவரை இங்கு மக்கள் உளரீதியான தாக்கங்களை அனுபவித்து வருகின்றனர். ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் மக்கள் இறங்கி ஏறுவதும், அடையாள அட்டைகளைக் காட்டுவதும் சொந்த மண்ணில் நடக்கும்போது அதனால் ஏற்படுகின்ற உளரீதியான தாக்கத்தை சிங்கள அரசியல் வாதிகளால் உணர்ந்து கொள்வது கடினமே.

தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக சோதனைச் சாவடிகளில் இறக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சோதனைகள் தனிமனித உரிமைகளையும் சுய கௌரவத்தையும் பாதிக்கின்றது என்பதை எவரும் நிராகரித்து விட முடியாது.

இந்நிலையில் தமிழ்மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற பிரதமர் ரணிலின் கொள்கை நியாய பூர்வமானது, என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அத்தகைய அடிப்படை பிரச்சினைகளை இனங் காணவும் - அதனைத் தீர்ப்பதற்கான வழி வகைகளை ஏற்படுத்தவும் விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவது அவசியமாகும். எனவே அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னதாக அரசு முதலில்புலிகளுடன் பேச வேண்டும்.

## வெள்ளி நற்சிந்தனை

# மார்கழியில் நீராடி மகாதேவன் புகழ்பாடி

# ஆறும் பெறாத இன்பமதைப் பெற்று வாழ்வீர்

கீதையிலே கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் போது 'மாதங்களில் நான் மார்கழி என்று கூறியிருப்பதிலிருந்தே மார்கழியின் தனித்துவம் சிந்திக்கக் கூடியதாக வுள்ளது. நவநாயகர்களுள் முதலானவனும் பல்வேறு ஆற்றல்களும் மிக்கவனுமான சூரியபகவான்தேவகுருவாகிய வியாழபகவானின் ராசிவீடாகிய தனு இராசியில் பிரவேசித்துச் சஞ்சரித்திருக்கும் மாதமே மார்கழியாகும்,

### தேவர்களின் வைகறை

பல்வேறு சிறப்புக்களும் உடைய இருவர் ஒருவீட்டிற் சந்தித்தால். எவ்வளவு பெருமையுண்டாகும். அவர்கள் பார்வையில் எல்லோர் கவனமும் ஈர்க்கப்படுமன்றோ அந்தவிதத்திலே மார்கழி சிறப்புமிகு பீடத்தமர்ந்திருப்பதாக கருதப்படுகின்றது பீடத்தமர்ந்த மாதம்மார்கழி என்பதையே அறியாதார் பீடைமாதம் எனத்தவறாகக் கருதுகின்றார்கள்.

தேவர்கட்கு ஒருநாளானது மானிடர்க்குஒருவருடமாகின்றது. இதில் தைமாதம் முதல் ஆனி மாதம் வரை தேவர்கட்குப் பகலாகவும், ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரை இரவாகவும் கழிகின்றது. இவ்விதத்திலே மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாகிய விடியற்கால

## நீர்வைமணி

மாக உள்ளது. தேவர்களின் வைகறைப் பொழுது தான் மார்கழி மாதமாதலால், இம் மாதம் இறைவழிபாட்டிற்கு மிகச் சிறப்பான தாகக்கொள்ளப்படுகின்றது. ஆகவே தான் சிதம்பரத்திலே திருவாதிரை விழாவும் பூலோக வைகுண்டம் எனக் கருதப்படும்ஸ்ரீரங்கத்திலே சுவர்க்கவாயில் ஏகாதசிப் பெருவிழாவும் வெகு சிறப்பாகஇடம்பெறுகின்றது.

### மார்கழி நீராடல்

மேலும் திருவாசகமருளிய மாணிக்கவாசக சுவாமிகளும் திருவெம்பாவையிலேமார்கழி நீராடேல் எம்பாவாய் எனவும், ஸ்ரீ ஆண்டாளாகியசூடிக் கொடுத்த நாச்சியார் திருப்பாவையிலே 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாளில் நீராடப் போதுவீர் போதுமினோ எனவும் மார்கழியாத வைகறைப் பொழுதில் நீராடி வழிபாடுகள் செய்யும் சிறப்பினை அழகாகப் பாடியுள்ளார்கள்.

மார்கழி மாதத்திலே வைகறையில் துயிலெழுந்துநீராடித் திருப்பள்ளி எழுச்சி பாடியும், திருவெம்பாவை, திருப்பாவை என்பன பாடியும் இறைவழிபாடுகள்செய்வது எம்மக்களின் சிறப்புமிகு மார்கழிநோன்பு வழிபாடுகளாகும்; அன்றியும் இல்லங்கள்தோறும்அழகுமாக் கோலங்கள் போட்டு பிள்ளையார் வைத்தும் வழிபாடுசெய்வது தொன்று தொட்டு வரும்



வழிபாட்டுச் சிறப்பாகவும் உள்ளது.

### மக்களைத் துயில் எழுப்பல்

மார்கழித் திங்களில் ஆலய வழிபாடுகள் மட்டுமன்றி, வீதி தோறும் வைகறைப் பொழுதில்மக்கள் திருப்பள்ளிஎழுச்சி திருவெம்பாவை ஓதி சங்கு, மணிஓசைகள் எழுப்பி மக்களைத் துயிலெழுப்பிவருவதும் இம்மாதத்திற்கே உரியதனிப் பெருமையாகும். ஆடவர், மங்கையர், சிறுவர், சிறுமியர் யாவரும் மார்கழிமாதத்திலே

(6-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் இருந்து எழும் முட்டுக்கட்டைகளை

# புதிய அரசு அணுகப் போகும் விதத்திலேயே

# சமாதான முயற்சியின் வெற்றி தங்கியுள்ளது

### வீரகேசரி ஆசிரியர் பி. பி. சிக்கு பேட்டி

[கொழும்பு]

மக்கள் களைத்துப்போய் விட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில்இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையில் சமாதானத்தையே எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

இவ்வாறு வீரகேசரியின் ஆசிரியர் தேவராஜ் பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டியில்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தமின்றி எந்த வகையிலும் தீர்வு காண முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட ஒரு விடயம்.

இலங்கைஅரசியலின்கடந்த காலத்தை எடுத்துப்பார்க்கையில், யாராவது தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை எடுத்துக்கூறினாலோ அல்லது அது சரி என்று கூறினாலோ அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற முத்திரை குத்தப்படுவது வழக்கமான ஒரு நிகழ்வாகஇருக்கின்றது.

அதன் தொடர்ச்சியிலேயே கடந்த காலத்தில் சமாதான முயற்சியில் ஈடுபட்ட நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர் என்ற முத்திரை குத்தப் பட்டது.

அவர் சமாதானமுயற்சியில் ஈடுபட்டசமயம், இந்தியாவில் தூரதர்ஷன் தொலைக்காட்சியில் உரையாற்றுகையில்; தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சமஷ்டி முறையிலான அமைப்பே இலங்கைக்கு உகந்தது என்று தெரிவித்திருந்தார்.

இவரது இந்தக் கருத்தை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான கருத்து என்று கூறி ஜே.வி.பி உட்பட சிஹலஉறுமயவும் அதனை தொடர்ந்து இலங்கை அரசும் அவருக்கு எதிராக அறிக்கைகளை விட்டுத் தள்ளின.

இவை கடந்த காலங்களில் நடைபெற்றவை. ஆனால் இவைஇனி நடைபெறாதுஎன கூறுவதற்கு இல்லை. ஏனென்றால் விடுதலைப்புலிகள் தமிழீழ கோரிக்கையைக் கைவிட வேண்டும். ஆயுதங்களைக் கீழே போடவேண்டும். அவ்வாறு செய்தால் தான் அவர்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி கூறி வருகிறது.

இவ்வாறு சமாதானத்திற்கு எதிராக பல தடைகள் வந்து கொண்டிருக்கும் பொழுது அதனை இந்த அரசாங்கம் எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பதிலிருந்து தான் சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றியடையுமா அன்றி தோல்வியடையுமா என்பதைத் தீர்மானிக்க முடியும்;

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜே.வி.பி சிஹல உறுமய போன்ற கட்சிகள் எதிராக குரல் கொடுப்பது மட்டுமன்றி ஆர்ப்பாட்டங்களிலும்ஈடுபட முயற்சிக்கலாம்;

அரசு மோதல் தவிர்ப்பையும் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தையும் பிரகடனப்படுத்தியுள்ளனர்; போர்நிறுத்தம் மோதல் தவிர்ப்புஎன்பன இரு வேறுபட்ட சொற்பதங்களுடன் வெளிவந்திருக்கின்றன;

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் என்று அறிவித்ததன் மூலம் போர் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தியிருக்கிறார்கள்:

ஆனால் அரசதரப்பு மோதல் தவிர்ப்பு என்று அறிவித்தன் மூலம் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில்சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்; ஆனால் மோதலில் ஈடுபட மாட்டார்களென படைத் தரப்புதிட்டவட்டமாக அறிவித்துள்ளது,

இவ்வாறான சொற் பிரயோகங்கள் எந்த அளவிற்கு நடைமுறைரீதியில் வெற்றியளிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனென்றால் பயங்கரவாத தடைச்சட்டம் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

போர் நிறுத்தம்- மோதல் தவிர்ப்பு என்பன பொதுவாக படையினருக்குத் தான் அனுகூலமாக இருக்கின்றன. பயங்கரவாததடைச்சட்டம் அமுலில் இருக்கும் போது, யாரையும் கைது செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

1987 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட கால கட்டத்தில் தான் குமரப்பா, புலேந்திரன் போன்றவர்கள் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வர எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

இதனையடுத்து யுத்தநிறுத்தம் மட்டும் முறிவடையவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் முறிவடைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இருதரப்பினரும் உண்மையிலேயே சமாதானத்தை முன்னெடுப்பதாக இருந்தால் போர் நிறுத்தம் அல்லது மோதல் தவிர்ப்பு என்பதில் திட்டவட்டமான ஒரு வரையறைக்குள் இரு பகுதியினரும் வர வேண்டும் என்றார். [உ-5]

## தினசரி தியானம்

## துரியம்

கருதும்அடி யார்கள்உளங் காணவெளியாகுந்
துரிய நிறை வான சுகமே பராபரமே

- தாயுமானவர் -

நாள் தோறும் நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளில்நாம் மாறி மாறி உழன்று வருகின்றோம். இம்மூன்று மனநிலைகளுக்கு நாம் அடிமைப்பட்டவர்களாகவும் இருந்து வருகின்றோம்.

இம் மூன்றுக்கும் பொதுவாயும் இம் மூன்றினுள் தோயாதும் இருக்கிற அறிவு நிலையே துரியம்.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# அரசியல் தீர்வுக்குப் புலிகள் இணங்கினால் அவர்கள் மீதான தடையை நீக்கலாம்

## டி.எம்.ஜயரத்ன கருத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் விடுதலைப்புலிகள் அரசியல் தீர்வுக்கு வருவார்களேயானால் அவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு பொது ஜனஐக்கிய முன்னணிக்கு ஆட்சேபனை இல்லை, என்று முன்னாள் அமைச்சரும் பொது ஜனஐக்கிய முன்னணியின் செயலாளருமாகிய டி.எம் ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் டி.எம் ஜய்ரத்தின மேலும் தெரித்திருப்பதாவது.கடந்த பொது ஜனஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.கட்சி ஆதரவு வழங்கி இருந்தால் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசிய கட்சி அன்று விட்ட தவறை பொது ஜனஐக்கிய முன்னணி விடமாட்டாது. அரசு எடுக்கும் ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு வழங்கவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

(வ)

— — — — — — — — —

**மோட்டார்...**

மகிழ்வடைந்த மக்கள் அவர்களைக் கட்டித்தழுவி நலம் விசாரித்து மகிழ்வுடன் பேசியுள்ளனர்.

புலிகளின் வாகன அணி மகிழ்வுடன் மட்டக்களப்பு நகரில் மோட்டார் சைக்கிளில் வலம் வந்ததுடன் அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு படையினருடனும் உரையாடியதாக மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புலிகளின் இவ் வாகன அணியினர் மீண்டும் தமது பகுதிக்கு திரும்பிச் செல்லும் போது கோட்டை கரப்பாலச் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அங்கிருந்து அனைவரையும் கொண்டு சென்ற இராணுவத்தினர் காந்தி சதுக்க முகாமில் தடுத்து வைத்தனர்.

இதனை பொதுமக்கள் மூலம் அறிந்து கொண்ட தமிழர் விடுதலை கூட்டமைப்பின் மட்டக்களப்பு எம்.பி ஜோசப் பரராஜசிங்கம் சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்து மட்டக்களப்பு 233 ஆவது இராணுவப் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப்ரினன்

— — — — — — — — —

ணுகேணல் வி.எல்.ஆர் அன்ரனீசின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அதிகாரி அன்ரனீசின் உடனடி உத்தரவுக்கு அமைய அனைத்துப் போராளிகளும் விடுதலை செய்யப் பட்டனர்.

பின்னர் இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிளும் பரஸ்பரம் கைகுலுக்கி தமது உறவின் மகிழ்வை வெளிப்படுத்தியாவாறு விடைபெற்றுச் சென்றுள்ளனர்.

இதேவேளை யுத்த நிறுத்தம் மோதல் தவிர்ப்பு அமுலில் இருக்கும் இவ்வேளையில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்புக்கு விடுதலைப்புலிகளின் அணியினர் நேற்று இரண்டாவது தடவையாக சென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

— — — — — — — — —

**இத்தாலி...**

கைது செய்யப்பட்டவர்களில் 14 பேர் தமிழர்கள் எனவும் இவர்களில் 9 பேர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பை சேர்ந்தவர்கள் எனவும் நீர்கொழும்புப் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி என்.பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்களை ஏற்றிச் செல்வதற்காக தலா 3லட்சம் ரூபா முகவரினால் பெறப்பட்டதாக கைது செய்யப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தற்போது நீர்கொழும்புப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை கஸகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து தங்கியிருந்த 49 இலங்கையர்களை அந்நாட்டு அரசு தற்போது தடுத்து வைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

— — — — — — — — —

**வடமராட்சி.....**

இந்துகலாச்சார அமைச்சர் தி.மகேஸ் வரன் மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் தினசரி ஒரு விமானத்திற்குரிய பயணிகளின் எண்ணிக்கை அடிப்டையில் வடமராட்சி மக்களுக்கு விமான பயணச்சீட்டுக்கள் வழங்கப்படும்.

(ந)

— — — — — — — — —

**திம்புக் கோட்பாட்டின்.....**

ஆட்சிக் காலம் முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்பு வாய்ந்த பதவிகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வகித்தவர். திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டு பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கை வகித்தவர்.

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் தமிழ்க்கட்சிகளும் விடுதலைப்புலிகளும் ஒத்தகருத்தையே கொண்டுள்ளனர். இந்நிலையில் பேச்சு வார்த்தைகளுக்கு முன்னதாக மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்ட பின் தீர்வுத் திட்டமொன்றை விடுதலைப்புலிகள் முன் சமர்ப்பிப்பதற்கு அடிப்படையாக திம்புக் கோட்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படவிருப்பதால் அதற்கும் மேலான அதிகாரங்கள் கொண்ட தீர்வுத்திட்டத்தை முன் வைக்கலாமா? என்று ஆராய்வதே இச்செயலணியின் தலையாய கடமையாக இருக்குமென தெரிவிக்கப்படுகின்றது.

**பேர்னாட் திலகரட்ணாவை நாடுதிரும்புமாறு அழைப்பு**

இச்செயலணியின் கடமைகளை ஆரம்பிப்பதற்கு தற்போது வெளிநாடொன்றில் தங்கியுள்ள பேர்னாட்டை உடனடியாக நாடு திரும்புமாறு அவசர அழைப்பொன்றினை பிரதமர் ரணில் விடுத்துள்ளார்.

**எதிர்க்கட்சிகளின் ஆதரவை திரட்ட கரு.பீரிஸ் முயற்சி**

இது இவ்வாறிருக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சிகளுக்கு ஆதரவு திரட்டும் வகையில் தமிழ்க் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகளுக்கு திம்புக் கோட்பாடுகள் பற்றிய விளக்கங்களை அளிப்பதற்கு அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, பேராசிரியர் ஜீ.எல், பீரிஸ் ஆகியோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். பிரதமர் ரணிலினால் நியமிக்கப்பட உள்ள இச்செயலணிக்குழு தனது கடமையை பிரதமர் அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளும்.

(வ)


## நூல் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பும்




இடம்: யா/கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்.
காலம்: 2001-12-30 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 09.00 மணி

தலைவர்
திரு. க. அம்பலவாணர்.
(கமலரூபன் நினைவுச் சபை)
பிரதம விருந்தினர்
திரு. எஸ். சிவலிங்கராசா
(யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்)
சிறப்பு விருந்தினர்
திரு. செ. ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், கரவெட்டி)
திரு. வ. செல்வராசா
(கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)
திரு. த. சிதம்பரப்பிள்ளை
(தலைவர், கட்.நெ.ப.நோ.கூ.சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கரவெட்டி. கமலரூபன் நினைவுச் சபை

(c/3081)



SUBRA(14)
சித்தன்கேணி

2004 A/L

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப்பிரிவு

ஆரம்பம் 03.01.2002
காலை 11.30

தரம் 6- O/L வரை

புதிய பிரிவு
31/12/2001 காலை 7.30

(C3083)


## பல்கலைக்கழக மினி ஒலிம்பிக்
# உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலை சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 7வது மினி ஒலிம்பிக் உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்பல்கலைக் கழக அணி சம்பியனாகியுள்ளது.

கடந்த 19ம் திகதி ஆரம்பமான இவ் உதைபந்தாட்டப் போட்டியில் பேராதனைப் பல்கலைக்கழக அணியும் யாழ் பல்கலைக்கழக அணியும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இறுதிச் சுற்றுப் போட்டியில் பேராதனைப் பல்கலைக்கழக அணியுடன் மோதிய யாழ்பல் கலைக்கழக அணி சிறப்பாக விளையாடி 3-1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டியில் மட்டக்களப்புப் பல்கலைக்கழக அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை மினி ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளமையும் பளுதூக்கும் போட்டியில் யாழ் பல்கலைக்கழகப் பௌதிக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கே.எழிலழகன் 140 கிலோ கிராம் எடையை தூக்கி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மினிஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி 4வது தடவையாக சம்பியன் ஆகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ4)

## தேர்த்திருவிழா நேரடி வர்ணனை

நாளை நடைபெறும் காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் தேர்த்திருவிழாவின் நேரடி வர்ணனை யாழ்சேவை, வானம்பாடி, தேசிய ஒலிபரப்பு சேவை ஆகியவற்றில் ஒலிபரப்பப்படும்.

இதற்கான ஒழுங்குகளை அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

(ந)

— — — — — — — — —

**அரசு – புலிகள்.....**

புலிகளுடன் அரசு பேச வேண்டும். இம்முயற்சிக்கும் சமாதான முன்னெடுப்புக்கும் நோர்வே தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்றும் அதனை இலங்கை அரசு ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ரணிலின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நோர்வேப் பிரதமர் இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே முன்னரைப் போன்று ஈடுபடுமென்று உறுதியளித்தார் என தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை நோர்வேயின் புதியபிரதமர் கொன்ஸ்ரைல்விக்கும் பிரதமர் ரணிலும் முதல் தடவையாக தொலைபேசியில் பேசியுள்ளனர்.

(இ)


## பிறிமா மா விலைமாற்றம்

பிறிமா சிலோன் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் மாவின் விலை ரூ 3/= ஆல் அதிகரித்துள்ளமையால் எமது ஸ்தாபனம் இன்றுமுதல் மாவின் விலையை கீழ் காணும் விலைப்படி விற்பனை செய்யவுள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| பிறிமா மா | மொத்த விலை | ரூ | 22.15 |
| | சில்லறை விலை | ரூ | 22.50 |
| மில்மா மா | மொத்த விலை | ரூ | 22.65 |
| | சில்லறை விலை | ரூ | 23.00 |

**வி. எஸ். பி. குறூப்,**

275 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2653

99-105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2150

(இரு இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்)

(c/3082)



## கண்ணீர் அஞ்சலி



ஈழத்துச் சிதம்பரத்தின் பிரதமகுரு
சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள்
மங்களேஸ்வரக் குருக்கள்
அவர்கள்

இறைபதம் எய்தியமை கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

50,52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S. பேரம்பலம் சகநிறுவன
உரிமையாளரும்,
ஊழியர்களும்.





கலைநயம் மிக்க எழிலுறு தங்க நகைகளுக்கு

# விவேகா நகை மாடம்

131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



(C/2212)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2001ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.